தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை: ரூ. 20
ஏப்ரல், 2025

மலர்: 26
இதழ் : 12

ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித்துறை

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

எதுனாலும் 'நான் பாத்துக்கிறேன்' –குழு தந்த தைரியம்

(செம்மலர் சுய உதவிக் குழு)

உரிமைக்குரல்... சிறை... நோபல் பரிசு! வங்காரி மாத்தாய் – வரலாற்றில் பெண்கள்

உழைக்கும் மகளிருக்குத் துணையாய் என்றும் –மகளிர் தின கொண்டாட்டம்

"மீனை சுத்தம் செய்து தர வேலையை செய்யுறோம், இதுல வரவருமானத்துல தான் வாழுறோம்.

TNULM மூலமா சுத்த செஞ்ச மீன் கழிவுகள பயன்படுத்தி மீன் அமிலம் தயாரிச்சா கூடுதல் வருமானம் வரும்னு சொன்னாங்க.

நாங்களும் பயிற்சி மூலம் தெரிஞ்சிகிட்டு மீன் அமிலம் தயாரிச்சிட்டு இருக்கோம். இப்ப சந்தை வாய்ப்பை உருவாக்க முயற்சி செஞ்சிட்டு இருக்கோம்.

**" உன்னையே நீ நம்பு
ஒரு நாள் உயர்வு நிச்சயம்"**

உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அன்புச் சகோதரிகளுக்கு வணக்கம்!

நம் மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளாகிய உங்களுடன் ஒவ்வொரு மாதமும் முற்றம் வழியே உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முற்றத்தின் வழியாக மட்டுமன்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் உங்களில் சிலரை கடந்த மாதம் நேரிலும் சந்தித்து உரையாடினேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில், பழவனக்குடி ஊராட்சியில் உள்ள சுமார் 25 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுடன் கலந்துரையாடுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். குழுக்களுக்காக செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகள் ஊராட்சி அளவில் பயனாளர்களை எப்படி சென்று சேருகின்றன என்பதை உங்களோடு கலந்துரையாடிய போது அறிந்து கொள்ள முடிந்தது.

குறிப்பாக, வங்கிக்கடன் இணைப்புகளை முதலீடாகக் கொண்டு தொழில் தொடங்கி, பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக நீங்கள் இருப்பதை உங்கள் மூலமாகவே கேட்ட போது அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது. இந்தக் கலந்துரையாடல் குறித்து, கவிதா எனும் சகோதரி அளித்த கடிதத்தில், "எங்கள் கருத்துகளை எங்களுடன் அருகாமையில் அமர்ந்து 2 மணி நேரத்துக்கு மேல் பொறுமையாக கேட்டதற்கு நன்றி" என்று அவர் எழுதியிருந்தார். அதை வழிமொழிவதாக சகோதரிகள் கையொப்பமிட்டு இருந்தார்கள். அதுமட்டுமல்ல, அந்தக் கடிதத்தில் அவர் கூறியிருந்த ஒவ்வொரு வார்த்தையும் உங்களுக்காக இன்னும் உழைக்க வேண்டும் என்ற உத்வேகத்தை அளித்துள்ளது.

கூடுதலாக பழவனக்குடியில் ஏராளமான சகோதரிகள், உங்களுடைய கோரிக்கைகளையும் முன் வைத்தீர்கள். பட்டா வேண்டும், வீடு வேண்டும், என்றெல்லாம் மனு அளித்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்கு அவற்றை உடனடியாக எடுத்துச் சென்று, நீங்கள் அளித்த கோரிக்கை மனுவில் மை காய்வதற்குள், அவற்றை நிறைவேற்றினோம்.

இதைப்பற்றி சட்டப்பேரவையில் நம்முடைய துறைசார்ந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் மீதான பதிலுரையிலும் உரையாற்றி இருந்தேன். தமிழ்நாட்டின் மகளிர் அனைவரும் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்றே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற மாதம் முற்றம் இதழில் நான் குறிப்பிட்டு இருந்ததைப் போலவே, நிதிநிலை அறிக்கையில் சுய உதவிக்குழு சகோதரிகளின் ஏற்றத்துக்காக எண்ணற்ற அறிவிப்புகளை நம்முடைய அரசு வெளியிட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கைக்கு முன்பாகவே, மகளிர் தின நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நம் முதலமைச்சர் அவர்கள், பல்வேறு பயன்களை அளிக்கக்கூடிய அடையாள அட்டைகளை சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கினார்கள். அதுமட்டுமல்ல, இந்தாண்டு வங்கிக்கடன் இணைப்பாக 37000 கோடி ரூபாயை வழங்க நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இது தவிர, 15 ஆயிரம் குழுக்களுக்கு ரூ.22.50 கோடி சுழல் நிதி, 2500 சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 25 கோடி வாழ்வாதார நிதி, நமது சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை ரூ.400 கோடிக்கு விற்பனை செய்திடத் திட்டம், 100 மின் ஆட்டோக்கள், ரூ.90 கோடி 'சமுதாய முதலீட்டு நிதி' மூலம் 6000 சுய உதவிக் குழுக்களுக்குக் கடனுதவித் திட்டம் என உங்கள் வாழ்க்கையை அடுத்தக் கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கு அடித்தளமிடும் அறிவிப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் தந்துள்ளார்கள். இதையெல்லாம் நீங்கள் உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் வளம்பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மகளிரின் முன்னேற்றத்தையும் – பொருளாதார சுதந்திரத்தையும் உறுதி செய்திட நம் திராவிட மாடல் அரசு என்றும் உங்களுக்குத் துணை நிற்கும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்த்துகளோடு,
உங்கள் சகோதரன்.

கற்கை நன்றே... கற்கை நன்றே...

உலகையே புரட்டி போட்டது கொரோனா பெருந்தொற்று என்றே சொல்லலாம். பல்வேறு நிறுவனங்கள் பள்ளிகள் கல்லூரிகள் என அனைத்தும் செயல்படாத சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில் பள்ளி செல்லும் மாணவ மாணவிகள் அனைவருக்குமே ஒரு மிகப்பெரிய கற்றல் இடைவெளி ஏற்பட்டது என்பதுதான் நிதர்சனமான உண்மை. என்னதான் ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்பட்டாலும் பள்ளி சென்று கற்றுக்கொள்ளும் மாணவ மாணவிகளிடம் இருக்கும் தெளிவு ஆன்லைன் வகுப்புகளில் இருப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழலில் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் இல்லம் தேடி கல்வித் திட்டம்.

இந்த திட்டம் அரசு பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை சரி செய்ய மிகவும் உதவியாக இருந்தது. தற்போது வரை இந்த திட்டம் ஒரு வெற்றிகரமான பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இப்போது இந்த திட்டத்தை பற்றி விரிவாக

இந்த திட்டத்தை 2021 ஆம் ஆண்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் திருவண்ணாமலை மாவட்டம் ஆராஞ்சி ஊராட்சியில் தொடங்கி வைத்தார். மேலும் இந்த திட்டத்தில் முறையான கல்வி தகுதியுடன் பயிற்சி பெற்ற இரண்டு லட்சம் தன்னார்வலர்கள் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகையுடன் பணியாற்றுகின்றனர். இதனைத் தொடர்ந்து செப்டம்பர் 2022 இல் நடத்தப்பட்ட விரிவான கணக்கெடுப்பின் மூலமாக, திட்டத்தின் தாக்கத்தை விரைவாக மதிப்பீடு செய்தல் மாநில திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இல்லம் தேடி கல்வித் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

மாணவர்களின் குடியிருப்பு பகுதியில் உள்ள பொது இடத்தில் அல்லது தன்னார்வலர் இல்லத்தில் மாணவர்களை சேர்த்து 1:20 விகிதப்படி ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை மாணவர்களுக்கு கதை, ஆடல், பாடல், நாடகம், விளையாட்டு, உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் கற்பித்தல் பணி நடைபெறுகிறது. இதனால் கல்வி ஆர்வம் குறைந்த மாணவர்கள் கூட, இதில் இணைந்து பயன் பெற்று வருகின்றனர். பள்ளிகளில் இருந்து நின்ற மாணவர்கள் கூட இந்தத் திட்டத்தால் மீண்டும் பள்ளியில் சேர்ந்து வருகின்றனர்.

முறையான கல்வித் தகுதியுடன் பயிற்சி பெற்ற இரண்டு லட்சம் தன்னார்வலர்கள்

இல்லம் தேடி கல்வி திட்டத்தின் பயன்கள்

இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் சிறப்பான முறையில் கல்வியைப் பெறுவார்கள்.

இதில் தன்னார்வ தொண்டர்கள், வீட்டுக்கு வீடு சென்று, பள்ளியில் சேர முடியாத மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவார்கள்.

மேலும், இந்த திட்டம் மூலம் போக்குவரத்து வசதி இல்லாத கிராமத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பயன் பெறுவார்கள்

இந்த திட்டத்தின் கீழ் தன்னார்வலர்களுக்கு மாத ஊதியம் ஆயிரம் ரூபாய் என்ற வகையில் ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இல்லம் தேடி கல்வி திட்டத்தில் தன்னார்வலர்களின் பங்களிப்பு

- வாரத்திற்கு குறைந்தது ஆறு மணி நேரம் குழந்தைகளுடன் செலவிட தயாராக இருக்க வேண்டும் (அல்லது) பகுதி நேரமாகவும் தன்னார்வலராக இருக்கலாம்.
- கண்டிப்பாக குழந்தைகளுடன் உரையாட தமிழ் தெரிந்திருக்க வேண்டும்
- தமிழ், ஆங்கிலம், மற்றும் கணிதம் கற்றுத்தர வேண்டும். (பயிற்சிகளும் உபகரணங்களும் வழங்கப்படும்) யார் நிர்பந்தமும் இன்றி தன்முனைப்பாக பங்கேற்க வேண்டும்
- குறைந்தபட்சம் 17 வயது நிரம்பி இருத்தல் அவசியம்

இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் தன்னார்வலராக விண்ணப்பிப்பது எப்படி?

இந்தத் திட்டத்தில் தன்னார்வலராக சேர இல்லம் தேடி கல்வியின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்துக்குச் சென்று, தன்னார்வலராக பதிவு செய்யவேண்டும். அதில் கேட்கப்படும் விவரங்களை பதிவு செய்யவேண்டும். பின்னர் அவர்கள் கேட்கும் ஆவணங்களையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும். பின்னர் சப்மிட் எனப்படும் பட்டனை கிளிக் செய்தால் நீங்கள் தன்னார்வலராக பதிவு செய்யப்படுவீர்கள். பின்னர் இல்லம் தேடி கல்வி திட்ட அதிகாரிகள் உங்களைத் தொடர்புகொண்டு தேவையான விவரங்களை உங்களிடமிருந்து பெறுவார்கள்.

இல்லம் தேடி கல்வித் திட்டம் என்பது மாணவ மாணவிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ள போதிலும் சிறிய கிராமங்களில் இது குறித்த விழிப்புணர்வு இன்னும் ஏற்படவில்லை என்றே கூறலாம். இந்த திட்டம் மாணவர்களுக்கு கற்றலில் ஆர்வம் தருவது மட்டுமின்றி அவர்கள் பள்ளிக்குச் சென்று பல்வேறு விளையாட்டு சம்பந்தமான செயல்பாடுகளிலும் ஈடுபடுவார்கள் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. தன்னார்வலர்கள் இது குறித்த விழிப்புணர்வை அவ்வப்போது ஏற்படுத்தி வந்தாலும் இந்த திட்டம் குறித்து தெரிந்த நாமும் நமக்கு தெரிந்த கிராமங்களில் குழந்தைகளுக்கு மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு எடுத்து கூறினால் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது சாத்தியமே....

–புவனேஸ்வரி தீபன்

இல்லம் தேடிக் கல்வி
தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை

உரிமைக்குரல்... சிறை... நோபல் பரிசு

வங்காரி மாத்தாய்

உலகில் இதுவரை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக பங்களிப்பு செய்தவர்களின் பட்டியலை தயார் செய்தால், அதில் தவிர்க்க முடியாத பெயர் வங்காரி மாத்தாய். இவர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக தன் வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர். ஆப்பிரிக்க சுற்றுச்சூழல் தினத்துக்கு வங்காரி மாத்தாய் தினம் என மற்றொரு பெயர் உண்டு. அந்த அளவுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மீது அதிக அக்கறை கொண்டவராக இருந்தார். அதற்குக் காரணம் சக மனிதர்கள் மீது அவர் கொண்ட அன்பு.

பள்ளி, கல்லூரிப் பருவம்

1940 ஏப்ரல் 1ஆம் தேதி கென்யாவில் உள்ள இஹிதே எனும் கிராமத்தில் பிறந்தவர் வங்காரி மாத்தாய். கிகுயு எனும் பழங்குடியினத்தைச் சேர்ந்தது அவரது குடும்பம்.

நாம் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்; அந்த வளர்ச்சி நம் சுற்றுச்சூழலை அழிக்காததாக இருக்க வேண்டும்.



கல்வியின் மீது அவருக்கு இருந்த காதலுக்கு குடும்பம் தடையாக இருந்தது இல்லை. எனவே அவரால் தொடர்ந்து கற்க முடிந்தது.

கென்யாவில் உள்ள நைரோபி பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற அவருக்கு, மேற்கத்திய நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பிருந்தபோதும் அதை விரும்பவில்லை. தன் வேர்களை வலுப்படுத்த விரும்பி கென்யாவிலேயே ஒரு வேலையை தேடிக்கொண்டார்.

பசுமைப் பட்டை இயக்கம்

ஆப்பிரிக்க உழைக்கும் பெண்களின் உரிமைக்காகவும், வறுமைக்கு எதிராகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். இதற்காக அவர் சில காலம் சிறை செல்ல நேர்ந்தது.

சுற்றுச்சூழல் பிரச்னையை வெறும் கென்யாவுடையதாக மட்டும் கருதாமல்,

அதை ஆப்பிரிக்காவின் பிரச்னையாக கருதினார். 1977ஆம் ஆண்டு பசுமைப் பட்டை இயக்கம் (Green Belt Movement) அமைப்பை நிறுவி சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தினார்.

இயக்கத்தின் பணி

பசுமை பட்டை இயக்கத்தை தொடங்கியது அவர் வாழ்க்கைப் பயணத்தில் திருப்புமுனையாக அமைந்தது. 1977ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இயக்கம், காடுகளை அழிக்கும் திட்டத்துக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தி வந்தது. விவசாயிகளுக்கு உறுதுணையாக நின்றது. பெண்களை மரம் நட ஊக்குவிப்பது, சமூகத்தில் சூழலியல் சிந்தனையை விதைப்பது, சுற்றுச்சூழல் கல்வி வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது என பல்வேறு முக்கிய பணிகளை பசுமை பட்டை இயக்கம் செய்தது.

அத்தனை உயிர்களிடமும் பேசும் என நம்புகிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

அமைதிக்கான நோபல் பரிசு

தனது சமூக செயல்பாடுகளுக்காக பல்வேறு விருதுகளை பெற்ற வங்காரி மாத்தாய், 2004ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை வென்றார். இப்பரிசை வென்ற முதல் ஆப்பிரிக்க பெண்மணி இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வங்காரி மாத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கியது குறித்து அதன் குழு, "மாத்தாய் கென்யாவில் நிலவிய அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக துணிந்து நின்றார். அவரது போராட்ட முறைகள் அங்கு நிலவிய அரச ஒடுக்குமுறையை தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் கவனம் பெறச் செய்தன. ஜனநாயக

பன்முகத்தன்மை

அறிவியல் அறிஞர், சமூக செயற்பாட்டாளர், சூழலியலாளர் என பன்முகம் கொண்ட வங்காரி மாத்தாய், சுற்றுச்சூழல் வளர்ச்சி குறித்து தன் பார்வையில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். அவை அன்றைய காலகட்டத்தில் அங்குள்ள மக்களுக்கு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

வங்காரியின் தத்துவம்

இயற்கை செழித்தால்தான் மக்கள் செழிப்பாக வாழ முடியும் என அவர் நம்பினார். தனது போராட்டம் குறித்து வங்காரி மாத்தாய், "நான் ஏன் சமூக பிரச்னைகளில் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்கிறேன் என எனக்கு தெரியவில்லை. எனக்குள் இருக்கும் ஏதோ ஒன்று, இங்கு பிரச்சினை இருக்கிறது, அதை சரிசெய்ய முயற்சி செய் என சொல்லிக்கொண்டே இருக்கிறது. அதை எனக்குள் இருக்கும் கடவுள் என நான் கூறுகிறேன். நம் அனைவருக்குள்ளும் ஒரு கடவுள் இருக்கும், அதுதான் இப்புவியில் இருக்கும் அனைத்து உயிர்களையும் இணைக்கும் ஆத்மா. எனக்கு கேட்ட அந்தக் குரல், பூமியின் விதியை நினைத்து ஏங்கும்

உரிமைக்காக போராடுவதில் அவர் பலருக்கும் உத்வேக சக்தியாக இருந்திருக்கிறார்" என தெரிவித்துள்ளது.

மரணத்துக்குப் பின்

இயற்கை வள பாதுகாப்புக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த வங்காரி மாத்தாய், 2011 செப்டம்பர் 25ஆம் தேதி புற்றுநோயால் காலமானார்.

வங்காரி மாத்தாய் தொடங்கிய பசுமை பட்டை இயக்கம் தற்போது சர்வதேச அமைப்பாக வளர்ந்து நிற்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், தென் அமெரிக்கா என பல்வேறு நாடுகளில் அதன் கிளை பரந்து விரிந்திருக்கிறது. இந்த இயக்கம் இதுவரை 5 கோடிக்கும் அதிகமான மரங்களை நட்டுள்ளது. காலநிலை மாற்றம், வன அழிப்பு, மணல் கொள்ளை என பல்வேறு சூழலியல் பிரச்சினைகளுக்கு எதிராக பசுமைப் பட்டை இயக்கம் தொடர்ந்து களமாடி வருகிறது. இயற்கை வளச் சுரண்டலுக்கு எதிராக போராடும் மக்களுக்கு நம்பிக்கை விதைகளை வங்காரி மாத்தாய் விதைத்துச் சென்றிருக்கிறார்.

–பாண்டியன்

மகளிர்தின கொண்டாட்டம்

உழைக்கும் மகளிருக்குத் துணையாய் என்றும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக மகளிர் தினத்தையொட்டி 08.03.2025 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளிட்ட மகளிர் பயனாளிகளுக்கு 250 ஆட்டோக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டைகள், வங்கிக் கடன் இணைப்புகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள், நன்னிலம் நில உடைமைத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு நிலப் பத்திரங்கள், நிலம் வாங்குவதற்கான மானியம் மற்றும் வெளிநாடு சென்று பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு வீடுகள் பெறுவதற்கும், வீடுகள் கட்டிக் கொள்வதற்கும் ஆணைகள், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பணி நியமன ஆணைகள், 2025ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருது, பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது மற்றும் மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விருதுகள் ஆகியவற்றை வழங்கினார். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை கையாள பெண் காவல் புலன் விசாரணை அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ஆட்டோக்கள்

நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் 2.41 கோடி ரூபாய் மதிப்பிலான 50 மின் ஆட்டோக்கள் (e-auto), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் முதல் கட்டமாக தலா ஒரு லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய 100 இளஞ்சிகப்பு நிற (Pink) ஆட்டோக்கள்,

250 ஆட்டோக்களை பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மார்ச்
8
2025

தொழிலாளர் நலத்துறை சார்பில் தலா ஒரு லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய 100 ஆட்டோக்கள், என மொத்தம் 250 ஆட்டோக் களை பயனா ளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இந்த ஆட்டோக்களில் பெண்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதற்காக காவல் துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS கருவியானது பொருத்தப்பட்டுள்ளது. மேலும், பெண்களுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சட்டங்கள், உதவி எண்கள் குறித்த விவரங்களும் இந்த ஆட்டோக்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு அடையாள அட்டைகள்

1000 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு பயன்களைத் தரக்கூடிய அடையாள அட்டைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்த அடையாள அட்டை மூலம், கிராம மற்றும் நகரப் பேருந்துகளில் 100 கிமீ தூரம், சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை 25 கிலோ வரை விலையின்றி எடுத்துச் செல்லவும், கூட்டுறவு வங்கிகள் மூலமாகப் பெறப்படும் பயிர்க் கடன் / கால்நடைக் கடன் /சிறுவணிகக் கடன் / தொழில் முனைவோர் கடன் / மாற்றுத் திறனாளிகள் கடன் எனப் பல்வேறு கடன்களைப் பெறுவதில் முன்னுரிமை, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாங்கும் பொருட்களுக்கு 5 சதவிகித கூடுதல் தள்ளுபடி, ஆவின் நிறுவன கடைகளில் குறைந்த விலையில் பொருட்கள் வாங்கவும், இ--சேவை மையங்களில் அனைத்து சேவைகளுக்கும் 10 சதவிகித சேவைக் கட்டணம் குறைவு போன்ற பல்வேறு சிறப்பு சலுகைகளை மகளிர் சுய உதவிக் குழுவினர் பெற்று பயன் பெறலாம்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு வங்கி கடன் இணைப்பு

பல்வேறு தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை 17,33,696 சுய உதவிக் குழுக்களுக்கு 1 லட்சத்து 5 ஆயிரத்து 235.46 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் 34,073 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 4,42,949 மகளிருக்கு 3,190.10 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில்

செயல்படும் 3,584சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 46,592 மகளிருக்கு 366.26 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்களுக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வங்கிக் கடன் இணைப்புகளையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

நன்னிலம் நில உடைமைத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு நிலப் பத்திரங்கள்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TAHDCO)சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும், "நன்னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம்" என்னும் திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை நில உடைமையாளர்களாக உயர்த்தி சமூக நீதியினை நிலைநாட்டிட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். 2024-2025 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கு19.99 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பெண் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக நன்னிலம் நில உடைமைத் திட்டத்தின் கீழ், ஐந்து பெண்களுக்குத் தலா 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிலப் பத்திரமும், நிலம் வாங்குவதற்கான மானியமாக தலா 5 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

2024 - 25 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கு ரூ19.99 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உயர்கல்வி பயில்வதற்காக மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில்.வெளிநாடு சென்று பட்ட மேற்படிப்பு பயிலும் 5 மாணவிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி உதவித் தொகையாக 3.50 கோடி ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் பெண் தொழிலாளர்களுக்கு நிதியுதவி

தொழிலாளர் நலத் துறை சார்பில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல

வாரியத்தின் கீழ்,பதிவு செய்துள்ள 40 பெண் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடுகள் பெறுவதற்கான உதவித் தொகை ஆணைகளும், 10 பெண் தொழிலாளர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் உதவியுடன் வீடுகள் கட்டிக் கொள்வதற்கான ஆணைகளும் என மொத்தம் 50 பெண்களுக்கு 1.18 கோடி ரூபாய் நிதி உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பணி நியமன ஆணைகள்

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சிபெற்ற செல்வி முத்துரத்தினஸ்ரீ, செல்வி ஜே. நிரஞ்சனா, செல்வி எஸ். வர்ஷினி ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

ஔவையார் விருது

சமூகச் சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு,மத நல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்பாக பணியாற்றும் பெண்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து உலக மகளிர் தினத்தன்று ஔவையார் விருது வழங்கப்படுகிறது. இந்த விருது பெறும் விருதாளருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், பொன்னாடையும், சான்றிதழும் வழங்கி சிறப்பிக்கப் படுகின்றனர். அந்த வகையில், பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்து வரும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் யசோதா சண்முகசுந்தரம் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2025-ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கி சிறப்பித்தார்.

1000

மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு பயன்களைத் தரக்கூடிய அடையாள அட்டைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில்,பெண்களுக்கு எதிரான வன்முறை, போதை ஒழிப்பு மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வடிவமைத்து, சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும், கடலூர் மாவட்டம். காட்டுமன்னார்கோவிலைச் சேர்ந்த செல்வி. க.சௌமியாவிற்கு, 2025-ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதினையும், விருது தொகையாக ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார்.

மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விருது

பெண் குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றிய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அழகு மீனா, இ.ஆ.ப.,அவர்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், 2025-ஆம் ஆண்டிற்கான மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார்.

நம்முடன் துணை முதலமைச்சர்!

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது, நமது சுய உதவிக் குழுவின் சகோதரிகளைச் சந்தித்து உரையாடிய சுவாரஸ்ய நிகழ்வு ஒன்று நடந்தது.

அந்த உரையாடலின் அனுபவத்தை, அதில் பங்கேற்ற சகோதரிகளிடம் கேட்போம். மகிழ்ச்சியும் ஆச்சரியமுமாக அவர்கள் பேசியது.

"நான் கற்பகம் செல்வி, திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி ஊராட்சியில் வசிக்கிறேன். ஸ்ரீ சாய் சுய உதவிக் குழுவின் ஊக்குநராக இருக்கிறேன். போன மாதம் ஆறாம் தேதி,எங்க குழுவோடு சேர்த்து 30 சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகளை துணை முதலமைச்சர் நேரில் சந்தித்தார். எங்களுக்கு ஒரே ஆச்சரியம், சந்தோஷம். அதே நேரம், 'என்ன கேக்க போறாங்க?' என்கிற பதட்டமும் இருந்துச்சு. இதுவரை இப்படி யாரையும் நான் சந்திச்சது இல்லை. 'எல்லாரும் எப்படி இருக்கீங்க? சாப்பிட்டீங்களா?' என்று அவர் கேட்ட அந்த கேள்வியால எங்க பதட்டம் எல்லாம் பறந்துடுச்சு. சொந்தக்காரங்க, வீட்டாளுங்க பேசினா எந்த மாதிரி இருக்குமோ, அப்படி இருந்துச்சு" என்று நீங்காத புன்னகையுடன் பேசினார்.

மேலும், "கிட்டத்தட்ட 2 மணி நேரமா எங்க கூட பேசினார். நாங்க எப்படி குழு நடத்தறோம், கடன் எப்படி வாங்கறோம், என்ன தொழில் செய்கிறோம், உருவாக்குகிற பொருளை எப்படி விற்பனை செய்கிறோம். எவ்வளவு சேமிக்கிறோம்.

இப்படி எங்கள பத்தி எல்லாம் கேட்டு தெரிஞ்சிக்கிட்டார். 2 மணி நேரம் போனதே தெரியல" என்று கூறினார்.

> **இவ்வளவு சகஜமா அவர் பேசுவாருனு நான் நினைச்சுக் கூட பாக்கல, அவர் பேச ஆரம்பிச்சதும். நாங்க எல்லாரும் எங்க தேவைகளை, குறைகளைச் சொல்லத் தொடங்கினோம்.**

சுய உதவிக் குழு பற்றி மட்டுமின்றி மாற்றுத்திறனாளிகள் குழுகளின் செயல்பாடு குறித்து பேசினார். மாற்றுத்திரனாளி குழு உறுப்பினர்கள் தச்சு தொழில் மற்றும் உணவகம் வைத்து தொழில் செய்வதாக தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பங்கெடுத்த சுதாமதி நம்மிடம் பேசுகையில், "நான் இந்நாள் வரை முதலமைச்சர், துணை முதலமைச்சரை தூரத்தில் தான் பார்த்தது உண்டு. அன்னிக்குத்தான் முதல் முறை அவரை இவ்வளவு பக்கத்துல பார்த்தேன்.

இவ்வளவு சகஜமா அவர் பேசுவாருனு நான் நினைச்சுக் கூட பாக்கல, அவர் பேச ஆரம்பிச்சதும். நாங்க எல்லாரும் எங்க தேவைகளை, குறைகளைச் சொல்ல தொடங்கினோம்.

எங்களுக்கான சாலை வசதி, பேருந்து வசதி செய்து தருவது, சாதி மறுப்பு திருமணம் செய்தவர்களுக்கான திருமண உதவித் தொகை கிடைப்பது, பெண்களுக்கான அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றை எங்க ஊரில் அமைப்பது



அன்றைய நாள் துணை முதலமைச்சருக்கு வேறு கூட்டங்களும் இருந்தது, இருப்பினும் அந்த பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு சகோதரி சுகன்யாவிற்கு பட்டாவும், 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் வீடும் அவரே வழங்கினார்.

போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது.

நாங்கள் சொன்ன அனைத்தையும் பொறுமையாக கேட்டு, உடனடியாக அத்தேவைகளை நிறைவேற்ற முன்னெடுப்புகளை மேற்கொண்டார். எழுந்து நின்று பேசினால், 'அது எல்லாம் வேண்டாம், அமர்ந்தே பேசுங்கள்' என்று கூறினார். ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது" தனது எண்ணத்தைப் பகிர்ந்தார்.

அன்றைய தினம், சுகன்யாவின் கனவும் நினைவாகியுள்ளது. அதை பற்றி அவர் பேசுகையில், "எங்களுக்கு ஒரு குடிசை வீடு தான், மின்சார வசதியும் இல்லை. கையில் குழந்தையை வைத்துக் கொண்டு அங்க வாழ்வது ரொம்ப கடினமா இருந்துச்சு. மேலும், நாங்க இருந்த நிலம், கோவில் புறம்போக்கு அதுக்கு பட்டாவும் இல்லை.

துணை முதலமைச்சர் உங்களுடைய கோரிக்கைகளை, குறைகளைப் பகிரலாம்னு சொன்னார். நிறைய தயக்கம் யோசனைக்குப் பிறகு என்னுடைய நிலைமையைச் சொன்னேன்.

'கோவில் புறம்போக்குல பட்டா தர முடியாதேமா, வேற இடம்ல பட்டா தந்த நீங்க போவீங்களா?' என்று அவர் கேட்டார். நானும் மாற சம்மதம் சொன்னேன். எங்க வீட்ட நேரில் வந்து பாத்தாங்க.

அன்றைக்கு சாயந்திரம் ஒரு மூணு மூன்றறை மணி இருக்கும் எனக்கு பட்டா தந்தாங்க. இப்போ, நான் வீடு கட்ட ஆரம்பிச்சுட்டேன்" என்று மகிழ்ந்தார். அவர் பெற்ற மகிழ்ச்சியை நம்மாளும் உணர முடிகிறது அல்லவா?

இந்தக் கலந்துரையாடல் குறித்து அதில் பங்கெடுத்த அரசு அலுவலர் கூறியதாவது,

"தயக்கமும் பதட்டமும் இன்றி, பெண்கள் அனைவரும் அவரிடம் தங்களின் தேவைகளை எடுத்துரைத்தனர். மின்மதி செயலி, விற்பனை அங்காடி, பூமாலை வணிக வளாகம் போன்ற சுய உதவிக் குழுவின் முன்னெடுப்புகளை அவர்கள் பயன்படுத்துகிறார்களா என்று கேட்டு அறிந்தார்.

அன்றைய நாள் துணை முதலமைச்சருக்கு வேறு கூட்டங்களும் இருந்தது, இருப்பினும் அந்த பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு சகோதரி சுகன்யாவிற்கு பட்டாவும், 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் வீடும் அவரே வழங்கினார்.

பேருந்து வசதி குறித்த கோரிக்கையையும் விரைந்து முடிக்க முன்னெடுப்புகளும் நடந்துக் கொண்டு இருக்கிறது.

அந்தக் கலந்துரையாடலை துணை முதலமைச்சரும் ஒரு மன நிறைவான ஒன்றாக உணர்ந்தார்" என்று கூறினார்.

கூட்டத்தின் இறுதியில் பங்கேற்பாளர்களிடம் கருத்துக் கேட்கப்பட்ட போது, "எங்களில் ஒருவராக கலந்துரையாடி, எங்களுடன் சரிசமமாக அமர்ந்து பேசியதற்கு நன்றி" என்று ஒரு கடிதம் வழியே, சகோதரி கவிதா தனது நெகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

எதுனாலும் 'நான் பாத்துக்கிறேன்'

–குழு தந்த தைரியம்

தனிமையை உணர்ந்துள்ளீர்களா? சொந்தங்கள் இருந்தும் யாருமில்லாத உணர்வு அது. அப்படியான சூழலில் குழு குடும்பமாக மாறியதால், அவ்வளவு ஆறுதல். 'குடும்ப உறுப்பினர்கள், சொந்தக்காரங்க கிட்ட பேச முடியாத விஷயங்களகூட நாங்க பேசிப்போம். குழுவே இன்னொரு குடும்பமா மாறிடுச்சு' இவ்வாறு உரையாடலைத் தொடங்கினார்கள், ஈரோடு மாவட்டம் சூரம்பட்டி வலசு ஊராட்சி சேர்ந்த செம்மலர் சுய உதவிக் குழுவினர்.

'பொறியியல் படிப்பது குழுவாலே'

"2016 இல் 12 நபர்கள் சேர்ந்து இந்த குழுவை உருவாக்கினோம். நேற்று தொடங்கியது போல இருக்கு. இதோ 10வது ஆண்டை நிறைவு செய்யவுள்ளோம். எங்களில் பலர், தயக்கத்தோடு தான் இந்த குழுவில் சேர்ந்தோம். இவ்வளவு தூரம் முன்னேறுவோம் என்று நாங்கள் அன்று சிந்தித்துக்கூட பார்க்கவில்லை" என்று குழுவின் ஊக்குநர் ஈஸ்வரி கூறினார்.

வேலைக்கு போகாத பெண்கள் உள்கடன் வாங்கி அதை கட்ட வேலைக்குச் சென்று தற்போது சுய தொழில் செய்கின்றனர். தையல், அழகுக்கலை, கார் உதிரி பாகம் விற்பனை, அரிசி மண்டி, பால் விற்பனை, மாவு அரைத்தல் என்று பல்வேறு தொழில்களைச் செய்ய இந்த குழுதான் முழு ஆதரவு, 'இந்த குழு இல்லனா எங்களால இத எதுவும் செய்திருக்க முடியாது' என்று மற்றவர்களும் கூறுகின்றனர்.

குழுவின் பிரதிநிதி துளசிமணி பேசுகையில், "இந்த குழுவில் சேர்வதற்கு முன்பு நான் எக்ஸ்போர்ட் கம்பெனியில வேலை செய்தேன். எவ்வளோ நான் சம்பாதிச்சாலுமே என் கையில நிக்காது. குழுவில் சேர சொன்ன போது, இது நம்ம சேமித்து வைக்க ஒரு வழி என்று நினைத்து தான் சேர்ந்தேன்.

குழுவில் உள்கடன் கிடைப்பதால், வீட்டிலேயே தையல் இயந்திரம் வைத்து வேலை செய்கிறேன். இப்போது எனது வருமானத்தைப் பெருக்க அழகுக்கலை பயின்று அந்த தொழிலும் செய்கிறேன். வேலையில் கிடைத்த சம்பளத்தை தொழிலில் ஈட்ட முடியுமா என்கிற பயத்தோடு தான் தொழிலை ஆரம்பித்தேன் ஆனால், இப்போது 'என் இரண்டு பெண் பிள்ளைகளும் பொறியியல் படிப்பதே இந்த குழுவால் தான்' என்று சிந்திக்கவே மலைப்பாக இருக்கிறது.

'நாங்கள் இருக்கிறோம்'

என் பிள்ளைகளை நான் படிக்க வைக்க முயற்சித்த போது, 'வேண்டாம், எதுக்கு தேவை இல்லாம படிக்க வைக்கிற? என்று கேட்காதவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அப்போது, 'நான் பாத்துக்கிறேன்' என்று சொன்னேன். குழுவும், சுய தொழிலும் அளித்த தைரியம் அது" என்று கண்கள் விரியக் கூறினார்.

குழுவின் மூத்த உறுப்பினர் ஜெயா, "நான் தங்கம் வாங்குவேன்னு நினைக்கவில்லை, முதல் முதல்ல

இந்த குழு காசுல இருந்து ஒரு அரை பவுன் தங்கம் வாங்கினேன். குழந்தைகளின் கல்வி, மருத்துவம், தொழில், குடும்ப சிக்கல் என்று ஏதுவாக இருந்தாலும் இந்த குழுவுல என்னால பேச முடியும்" என்று தனது அனுபவத்தைப் பகிர்ந்தார்.

கஷ்ட நஷ்டங்களில், 'நாங்க இருக்கிறோம்' என்கிற ஒரு வார்த்தை கேட்பவர்களுக்கு எவ்வளவு பலம் தரும். எங்க குழுவுல ஒவ்வொருத்தரும் ஒவ்வொருத் தருக்காகவும் இருக்கோம்" என்கிறார் ஈஸ்வரி. 'நாங்கள் இருக்கிறோம்' என்கிற வாக்கியம் தான் வீட்டிலேயே அழுது முடங்காமல், அடுத்தடுத்து ஓடனும் என்கிற உத்வேகம் தந்துள்ளது என்கிறார்கள் செம்மலர்கள். தன்னம்பிக்கை, பொறுமை, சகிப்புத் தன்மை போன்ற பண்பு நலன்களைத் தாண்டி மகளிர் தின நிகழ்ச்சி நடத்துவது, அரசுத் திட்டங்கள், அரசுத் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மருத்துவ முகாம்களில் பங்கேற்பு போன்ற தலைமைப் பண்பையும் சமூகப் பணி செய்யும் மனப்பான்மையையும் இந்தக் குழுவால் கற்றுள்ளதாக கூறுகிறார்கள்.

"நான் தங்கம் வாங்குவேன்னு நினைக்கவில்லை, முதல் முதல்ல இந்த குழு காசுல இருந்து ஒரு அரை பவுன் தங்கம் வாங்கினேன்."

'வங்கி படிவம் எழுத தயக்கத்தில் இருந்தோம் ஆனால், இப்போது வங்கி மேலாளரே எங்களைத் தேடி வந்து கடன் தருகிறார்கள்' என்று பெருமிதம் அடைகிறார்கள்.

ஆம், அதிகாரத்தில் இருப்பவர்கள் சாமானியர்களைத் தேடி வருவது அழகு!

அழுது முடங்காமல், முன்னேறு!

பெரிதும் கல்வியறிவு இல்லாத, வேலைக்களுக்கு செல்லாத பெண்களை சுய தொழில் செய்ய வைத்த இந்த குழுவைப் பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள்.

"ஒரு 12 பெண்கள் ஒண்ணு சேர்ந்து இருந்தா 'சாப்பாடு செய்வோம், டிவி பாப்போம், நாலு பேரு உக்காந்து கதைதான் பேசுவோம்'. ஆனா, இப்போ ஒரு குழுவாக சேர்ந்ததால சமூக பிரச்சனை, அரசியல்னு பேசறோம்" என்கிறார் ஈஸ்வரி. அவரைத் தொடந்து ஜெயா, "குழுவால தான் நாங்க வீட்ட விட்டே வெளியவறோம், இல்லனா சொந்தக்காரங்க வீட்ட தாண்டி வெளிய எங்கேயும் போக மாட்டோம்" என்றார்.

"எனக்கு படிப்பு ரொம்ப குறைவு, என் பிள்ளைங்க +2 தாண்டி காலேஜ் போறதே கனவு தான். இந்தக் குழு இருந்ததுனால தான் என் பிள்ளைங்கள இன்ஜினியரிங் படிக்க வைக்க முடிந்தது. பெரிய கனவ சாதிச்சிருக்கேன்" என்று துளசி மணி கூறினார். "இன்னைக்கு அரசாங்கம் எவ்வளவோ நன்மைகளைப் பெண்களுக்காகச் செய்கிறார்கள். குறிப்பாக, சுய உதவிக் குழுக்களுக்கு காலை உணவுத் திட்டத்தில் வேலை, மகளிர் உரிமைத் தொகை விண்ணப்ப படிவத்தின் வேலைக்கு சென்றோம், பூங்காக்களைப் பராமரிக்கும் பணி எங்களுக்கு கிடைத்துள்ளது. சமீபமாக மகளிர் குழுவை சேர்ந்தவர்களுக்கு தானே ஆட்டோ வழங்கியுள்ளனர்.

எங்களுக்கு விருது கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேர்காணல் வழியாக நன்றி சொல்லிக்கறோம்" என்று குழுவின் உறுப்பினர், ரேணுகா தேவி நெகிழ்ந்தார்.

பெண்களைப் பொருளாதாரத்தில், கல்வியில், சமூகத்தில் உயர்த்தும் மற்றொரு சுய உதவிக் குழுவின் கதையில் சந்திப்போம்!

–ப. க. புகழ்ச்செல்வி

இன்ஸ்டாகிராம்

இன்ஸ்ட்ண்ட் மார்க்கெட்டிங்

புதிய தலைமுறைகளின் பேவரைட் சமூக வலைதளம் இன்ஸ்டாகிராம். இந்தியாவில் 414 மில்லியன் இன்ஸ்டாகிராம் பயனாளர்கள் இருக்கிறார்கள். இது இந்திய மக்கள் தொகையில் 28.4 சதவிகிதம் ஆகும். இதில் 65 சதவிகித பயனாளர்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்கள். 18 முதல் 24 வரை உள்ள பயனாளர்கள் 31.7 சதவிகிதம்.

இன்றைக்கு எந்த பிசினஸ் எடுத்துக் கொண்டாலும், இளையதலைமுறையினர் முதலில் கேட்பது இன்ஸ்டா ஐடி இருக்கிறதா என்பது தான். இதனால் தொழில்முனைவோர்கள் தங்கள் பெயரிலோ அல்லது தங்களின் ப்ராண்டின் பெயரிலோ Professional Instagram கணக்கை தொடங்குதல் அவசியம்.

இன்ஸ்டாகிராம் ஏன் அவசியம்?

நம் வாடிக்கையாளர்களைக் கண்டறிதல்

உங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளில் ஆர்வமுள்ளவர்களை எளிதாக இன்ஸ்டாகிராம் மூலமாக அடையாளம் கண்டு அவர்களை அணுகலாம். நோம் இல்லாத இடத்திலும் நம்முடைய பொருட்களை பற்றியோ சேவைகள் பற்றியோ பேசும் போது, மற்றவர்கள் நம் தொழில் குறித்தும், வசதிகள் குறித்தும் அறிந்து கொள்ள இன்ஸ்டாகிராம் பக்கம் உதவுகிறது.

பிராண்ட் விழிப்புணர்வு

உங்கள் பிராண்டை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன் மதிப்பை உயர்த்தவும் உதவுகிறது. உங்கள் பிராண்டிற்காக நீங்கள் செலுத்தும் உழைப்பும், உங்கள் உண்மைக்கதைகளும் உங்கள் மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்துகிறது.

வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு

இன்ஸ்ட்கிராம் பக்கங்களின் மூலம் நம் பொருட்களை விரும்பும் வாடிக்கையாளர்களை கண்டறிந்து,அவர்களின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கவும், கருத்துக்களைப் பெறவும் முடிகிறது. இதனால் எளிதாக இருந்த இடத்திலேயே பிசினஸ் நடத்த உதவுகிறது.

இன்ஸ்டாகிராமின் முக்கிய வசதிகள்

இன்ஸ்டாகிராமை பொறுத்தவரை Surface கள் என்று சொல்லக்கூடிய அனைத்து வசதிகளையும் சரியாக பயன்படுத்தும் போது, நம் தொழில் பற்றிய பல தகவல்கள் வாடிக்கையாளர்களுக்கு சென்றடைகிறது. இதன் மூலம் ஆன்லைனில் விற்பனை அதிகரிக்கும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

ஃபீட் (Feed): இது முக்கியமான வசதி. படங்கள், வீடியோக்களைப் Feed இல் பதிவேற்றி உங்கள் பிராண்டை காட்சிப்படுத்தலாம். இதில் புகைப்படங்கள் பதிவிடும் போது அதற்கான பாடல்களையும் தேர்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒன்றுக்கும் மேற்பட்ட புகைப்படங்களை பகிர Carousel Post என்ற வசதியையும் பயன்படுத்தலாம். இந்த வசதியை பயன்படுத்தும் போது நல்ல தரமான புகைப்படங்களை அப்லோட் செய்வது நல்லது.

ஸ்டோரீஸ் (Stories): 24 மணி நேரம் மட்டும் தெரியும் குறுகிய வீடியோக்கள், புகைப்படங்களை ஸ்டோரீஸ் வைக்கலாம். மேலும் இந்த ஆப்ஷனில் நம் அன்றாட வாழ்க்கை முறை, பிசினஸ் பொருட்களின் வகைகள், எப்படி அது தயாரிக்கப்படுகிறது என்ற குறுகிய வீடியோக்கள், தள்ளுபடி தகவல்கள், புதிதாக ஏதாவது ஒரு விஷயம் செய்தால் அதற்கான Count Down, உங்கள் பொருட்கள் குறித்த Poll என இன்ஸ்டா ஸ்டோரீஸ் பல வசதிகளை கொண்டிருக்கிறது. நாள் ஒன்றிற்கு 8 ஸ்டோரீஸ் வரை பதிவிடும் போது உங்கள் ப்ரொபைல் பல பேருக்கு செல்லும் வாய்ப்புகள் அதிகம்.

ரீல்ஸ் (Reels): இன்ஸ்டாவில் அதிகம் பார்க்கப்படுவது ரீல்ஸ் தான். உங்கள் பொருட்கள் , சேவைகள் குறித்து நல்ல தகவல்களுடன்

சுவாரஸ்யமாக ஒரு நிமிடத்திற்கு வீடியோ தயாரித்து அதை ரீல்ஸ் ஆக அப்லோட் செய்யும் போது அதிக பார்வையாளர்களைச் சென்றடைகிறது. அந்த வீடியோக்கள் முடிவில் உங்கள் நிறுவனம் மற்றும் தொலைபேசி எண்கள் குறித்த விவரங்களை பதிவு செய்தால், உங்கள் பொருட்களை விரும்பும் வாடிக்கையாளர்கள் நேரிடையாக உங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

லைவ் (Live): இந்த ஆப்ஷன் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்து வாடிக்கையாளர்களுடன் நேரடியாக உரையாடலாம். வாரத்திற்கு ஒரு முறை உங்கள் வாடிக்கையாளர்கயோடு நேரடி ஒளிபரப்பில் நீங்கள் பேசும் போது உங்கள் பொருட்கள் சம்பந்தமாக நிறை குறைகளை நீங்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும்.

டைரக்ட் மெசேஜ் (Direct Message): இதில் வாடிக்கையாளர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசலாம். வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பொருட்களின் புகைப்படங்கள் மற்றும் தகவல்களை நீங்கள் நேரிடையாகவே அனுப்பலாம்.

ஹேஷ்டேக்ஸ் (Hashtags): உங்கள் பதிவுகளை சரியான நபர்களிடம் கொண்டு சேர்க்க உதவும். உங்களுடைய ப்ரத்யேக பொருட்களுக்கு அதற்குரிய Hashtag ஐ சரியாக பயன்படுத்த வேண்டும். உதாரணத்துக்கு நீங்கள் மதுரையை சேர்ந்த மேக்கப் ஆர்டிஸ்டாக இருந்தால், உங்களுடைய பதிவுகளில் நிச்சயமாக #Makeupartistmadurai #maduraimakeupartist #maduraibridalmakeupartist #maduraimakeupwomen போன்ற Hashtag களை பயன்படுத்தலாம்

அனலிட்டிக்ஸ் (Analytics): இது மிகவும் முக்கியம். உங்கள் கணக்கின் செயல்திறனையும், உங்களை பின்தொடர்பவர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அனலிட்டிக்ஸ் வைத்தே கண்டறிய முடியும். உங்களுடைய கணக்கில் Professional Dashboard என்ற ஆப்ஷன் இருக்கும். அதில் சென்று பார்த்தால் உங்களுடைய Followers யார்? அதில் எத்தனை சதவீதம் ஆண்கள் பெண்கள்? எந்தெந்த நாடுகள் மற்றும் நகரங்களில் இருந்து உங்களை பின்தொடர்கிறார்கள்? உங்களுடைய எந்த பதிவு அதிக பார்வைகளை கொண்டிருக்கிறது? உங்கள் பாலோயர்கள் எந்த நேரத்தில் ஆக்டிவ்வாக இருக்கிறார்கள்? என்ற தகவல்களை இந்த டேஷ்போர்ட் கொண்டிருக்கும். இதை குறிப்பிட்ட இடைவெளியில் கவனித்து வந்து அதற்கு தகுந்தாற் போல் பதிவுகளை இடலாம்

இன்ஃப்ளுயன்ஸர் மார்க்கெட்டிங் (Influencer Marketing): பிரபலமான நபர்கள், அதிக பாலோயர்ஸ் உள்ள நபர்கள் மூலம் உங்கள் பிராண்டை விளம்பரப்படுத்துவது Influencer Marketing என்று அழைக்கப்பட்டுகிறது. அவர்களோடு இணைந்து பணம் கொடுத்தும், அல்லது நட்பின் அடிப்படையிலும் இணைந்து Collob முறையில் வீடியோ பதிவிடலாம். இதனால் 2 பக்கத்திலும் உள்ள பாலோயர்களுக்கு 2 பேரின் பதிவுகளும் தெரியும்.

விளம்பரங்கள் (Ads): நம் தொழில் சார்ந்த வாடிக்கையாளர்களை அடைய கட்டண விளம்பரங்களை பயன்படுத்தி நம் பொருட்கள் மற்றும் சேவைகள் சார்ந்த தகவல்களை குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள், குறிப்பிட்ட இடம் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளை தேர்வு செய்து நாமே விளம்பரங்களை தேர்வு செய்யலாம். இதற்கு நாட்கள் அடிப்படையில் ஜிஎஸ்டியுடன் சேர்த்து கட்டணமும் உண்டு.

இன்ஸ்டாவை பொறுத்தவரை இத்தனை வசதிகளையும் சரியாக பயன்படுத்தும் போது சரியான வாடிக்கையாளர்களுக்கு நம்முடைய பொருட்களையும், சேவைகளையும் கொண்டு சென்று சேர்க்க முடியும்.

வீடியோ மூலம் காட்சிபடுத்துதல்

படங்கள், வீடியோக்கள் மூலம் உங்கள் தயாரிப்புகளை அழகாக காட்சிப்படுத்தலாம். பல லட்சம் பேருக்கு உங்களுடைய வீடியோக்கள் சென்றடையும் போது உங்களுடைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர வாய்ப்புகள் ஏற்படுகிறது.

போட்டியாளர்களைக் கண்காணித்தல்

போட்டியாளர்களின் உத்திகளை அறிந்து, நம் வணிகத்தை மேம்படுத்தவும் இன்ஸ்டாகிராம் கணக்கு உதவுகிறது.

இன்ஸ்டாவில் எப்படி Content போடுவது? எப்படி அதிக Followers பெறுவது என்பதை பற்றி அடுத்த மாதம் பார்க்கலாம்

–ஹேமா ராகேஷ்

மகளிர் முன்னேற்றம்

நேர்காணல்

பிழைகளில் இருந்து கற்றோம்

இ–காமர்ஸில் கலக்கும் நிவேதா முரளிதரன்

ஒரு சின்ன யோசனை, அந்த யோசனையை ஒரு தொழிலாக மாற்றி அதைத் திறம்பட செய்து, பலருக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி இன்று கோடிகளில் பணம் ஈட்டி வருகிறார் இ-காமர்ஸ் தொழில் கொடிகட்டிப் பறக்கும் நிவேதா முரளிதரன்.

அமேசான், ப்ளிப்கார்ட், மீஸோ உள்ளிட்ட ஆன்லைன் விற்பனைத் தளங்களில் பல்வேறு பொருட்களை விற்பனை செய்தும் விற்பனை செய்ய விரும்புவோருக்கு மார்க்கெட்டிங் செய்து அதை ஆன்லைனில் விற்பனை செய்தும் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு அமேசானில் எப்படி விற்பனை செய்வது என்பது குறித்து வகுப்புகளும் எடுத்துவரும் நிவேதா முரளிதரனை நமது முற்றம் இதழுக்காக சந்தித்து உரையாடினோம்.

இந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தது எப்படி?

அடிப்படையில் நான் ஒரு மென்பொறியாளர். ஒரு ஐடி கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். வேலை நேரம் போக மிச்சமிருக்கும் நேரத்தில் வீட்டில் இருந்து ஏதாவது பணம் ஈட்டும் தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. 2013இல் டிஜிட்டல் உலகம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவில் பெரிதாகிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் தான் இ-காமர்ஸ் துறையும் தலைதூக்க ஆரம்பித்திருந்தது. நிறைய பேர் அந்த துறை குறித்து பேசத் தொடங்கியிருந்தார்கள். ஒரு புதிய துறையை தேர்ந்தெடுத்தால் பெரிய போட்டி இருக்காது என்ற எண்ணத்தில் தான் இந்த இ- காமர்ஸ் துறையை தேர்ந்தெடுத்தேன்.

தொடக்கத்தில் சவால்கள் இருக்குமே?

2013இல் அமேசான், ப்ளிப்கார்ட் உள்ளிட்ட ஆன்லைன் ஷாப்பிங் தளங்களில் அவ்வளவு எளிதாகப் பணம் கொடுத்து பொருள் வாங்க மாட்டார்கள். ஆன்லைன் ஷாப்பிங் குறித்த புரிதல் மக்களுக்கு வரவர இந்தத் துறை பெரிய அளவில் உருவெடுத்தது. நான் இந்தத் துறைக்கு வந்த ஒரு சில ஆண்டுகளிலேயே குக்கிராமம் முதல் பெரிய பெரிய நகரங்களில் நிறைய வாடிக்கையாளர்கள் உருவாகி இருந்தார்கள்.

எனக்கு சிறு வயதில் இருந்தே கைவினைப் பொருட்கள் செய்வது எனக்குப் பிடிக்கும். செய்த பொருட்களை பள்ளி விழா நாட்களிலும் அருகில் இருக்கும் கடைகளில் விற்பனை செய்தேன். ஓரளவு வரவேற்பு இருந்தது. அதை கல்லூரி வரை தொடர்ந்தேன். அதையே இந்த இ-காமர்ஸ் தொழிலில் செய்து பார்த்தேன். என்னுடைய கைவினைப் பொருட்களை என்னுடைய மொபைல் போனில் போட்டோ எடுத்து அதை அமேசான், உள்ளிட்ட தளங்களில் பதிவேற்றுவேன். சரியாக போட்டோ எடுக்காதது, அதை சரியாக

நான் செய்த கைவினைப் பொருட்களை பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் அருகில் இருக்கும் கடைகளில் விற்பனை செய்தேன். ஓரளவு வரவேற்பு இருந்தது. அதையே இ–காமர்ஸ் தொழிலில் செய்து பார்த்தேன்.



சந்தைப்படுத்தாதது என ஆரம்பத்தில் எல்லாமே சொதப்பலாகத்தான் இருந்தது. ஆனால் அதில் இருந்து தான் ஒவ்வொன்றாகக் கற்றுக்கொண்டேன்.

ஆன்லைன் ஷாப்பிங் தளங்களில் என்னென்ன மாதிரியான பொருட்களை விற்பனை செய்து வருகிறீர்கள்?

தொடக்கத்தில் என்னுடைய கைவினைப் பொருட்களை விற்பனை செய்து வந்தேன். பின்னர், சிறுவர்களுக்கான உடைகள், விளையாட்டுப் பொருட்கள், தினசரி நாம் உபயோகிக்கும் சில அத்தியாவசியப் பொருட்களை சென்னை பிராட்வேயில் தேடி அலைந்து வாங்கி அதைக் கொண்டு வந்து ஒவ்வொரு பொருளையும் அழகாக புகைப்படம் எடுத்து அதை விற்பனைக்கு கொண்டு செல்வேன். அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது. கொஞ்சம் கொஞ்சமாக வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது.

இதெல்லாம் முழுநேர வேலையைத் தொடர்ந்துகொண்டே பகுதி நேரமாக செய்ததா?

ஆமாம்! விடுமுறை தினங்ககளில் பொருட்களை வாங்கி வந்து அதை பதிவேற்றும் வேலைகளை செய்வேன். ஏதாவது ஆர்டர் வந்தால், அதை மட்டும் எடுத்து சிறப்பாக பேக்கிங் செய்துவைத்து விடுவேன். எந்தத் தளத்தில் ஆர்டர் செய்தார்களோ அங்கிருந்தே கொரியர் பெற்றுக்கொள்ள ஒருவர் வந்துவிடுவார், அவரிடம் என் அம்மா அந்த பொருளை எடுத்துக் கொடுத்து விடுவார். அதனால் என்னுடைய ஐடி வேலையைத் தொடர்ந்து செய்து வந்தேன். ஆனால் ஒரு கட்டத்தில் நிறைய ஆர்டர்கள் வரத்தொடங்கியது. வருமானமும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. இந்த நேரத்தில் தான் ஐடி வேலையை விட்டு விட்டு முழு நேரமாக இ-காமர்ஸ் துறையை தேர்ந்தெடுத்தேன்.

இ-காமர்ஸ் துறையில் தற்போது உள்ள சவால்கள் என்னென்ன?

இந்தத் துறையில் மட்டும் லட்சத்துக்கும் அதிகமான விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். அதனால் போட்டி என்பது மிக மிக அதிகம். இந்தப் போட்டிகளை எல்லாம் சமாளித்து தான் வர வேண்டும். அடுத்து நாம் கொடுக்கும் பொருட்களின் தரம் சரியானதாக இருக்க வேண்டும். அதில் பிரச்சினை என்றால்

அதிக அளவில் அந்த பொருள் வாடிக்கையாளர்களால் திருப்பி அனுப்பப்படும்.

'ரிட்டர்ன்' என்று சொல்லப்படும் திருப்பி அனுப்பப்படும் பொருளால் நஷ்டம் ஏற்படாதா?

பெரும்பாலானவர்கள் ஆன்லைனில் இ-காமர்ஸ் தொழில் செய்யத் தயங்குவதற்கு இந்த ரிட்டர்ன்ஸும் ஒரு முக்கியமான காரணம் ஆகும். இ-காமர்ஸ் பிசினஸில் ரிடர்ன்ஸ் என்பது 100% தவிர்க்க முடியாத ஒன்று. இதனால் நஷ்டம் ஏற்படும் தான். இதில் கேஷ் ஆன் டெலிவரி என்று சொல்லப்படும் நேரிடையாக பணமாகக் கொடுத்து பொருளை வாங்கும் போது, இந்த ரிட்டர்ன்ஸ் அதிக அளவில் நடக்கிறது. வாடிக்கையாளரிடம் அந்த நேரம் அந்தப் பொருளுக்கான பணம் இருந்திருக்காது. அதுபோல் பொருளின் தரம் குறைவாக இருந்தாலும் ரிட்டர்ன்ஸ் அதிகமாகும். அதனால் தான் பெரும்பாலும் முன்கூட்டியே பணம் பெற்றுக்கொண்டு பொருட்களை அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

இருந்தாலும் சில ஆன்லைன் ஷாப்பிங் தளங்களில் செல்போன் கேட்டால் செங்கல் வருவதாக குற்றச்சாட்டுகளை பார்க்க முடிகிறதே?

உண்மை தான். இதில் மூன்று இடத்தில் தவறு நடக்கும். முதலில் தவறு நடக்கும் இடம் கொரியர். அந்த கம்பெனிகளுக்கே தெரியாமல், அங்கு வேலை பார்க்கும் சிலர் செய்யும் செயலால் இதுபோன்ற தவறுகள் நடக்க வாய்ப்பிருக்கிறது. அடுத்து வாடிக்கையாளர்கள். அவர்களில் சிலர் ஏமாற்றி இருக்க வாய்ப்புள்ளது. எல்லோரையும் சொல்லவில்லை. ஆனால் இப்படி தவறுகள் நடந்துகொண்டு தான் இருக்கிறது. அடுத்து விற்பனையாளர்கள். இங்கும் எல்லோரும் சரி என்று சொல்லவில்லை. இப்படி எல்லா இடத்திலும் இது தவறுகள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இதை சரி செய்யும் விதமாக சில ஆன்லைன் விற்பனை தளங்கள், நாம் ஒரு பொருளை பேக்கிங் செய்வதை முழுமையாக ரெக்கார்ட் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

ஆன்லைன் தளங்களுக்கு ஜி.எஸ்.டி தேவை. உங்களுக்கு அது பெறுவதில் சிரமம் இருந்தால், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட இடங்களில் விற்பனை செய்யலாம்.

சிசிடிவி கேமராக்களும் கட்டாயம் என்கிறார்கள். அதோடு கொரியர் இடத்திலும் அந்த பொருளின் எடை, நீளம், அகலம் எல்லாம் குறித்து வைக்கிறார்கள்.

இ-காமர்ஸ் துறைக்கு யாரெல்லாம் வரலாம்?

இந்தத்துறைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். பெண்களுக்கு இந்தத்துறை சுலபமானது. திருமணம், குழந்தை பிறப்பு என அவர்களுக்கு ஏகப்பட்ட பொறுப்புகள் இருக்கும்போதும் இதில் சமாளிக்கலாம், சம்பாதிக்கலாம். எந்த பொருளுக்கு தற்போது தேவை இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்து, அதை சிறப்பான முறையில் அமேசானிலேயே மார்க்கெட் செய்து விற்பனையைத் தொடங்கலாம். அமேசான் போன்ற ஆன்லைன் தளங்களுக்கு ஜி.எஸ்.டி தேவை. உங்களுக்கு அது பெறுவதில் சிரமம் இருந்தால், கொஞ்ச நாள் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட இடங்களில் விற்பனை செய்யலாம். எங்கு இருந்தாலும் ஓடுவதை நிறுத்தக்கூடாது. நிக்காமல் ஓடினால் முன்னேறலாம்!

– லோகேஷ்வரி இளங்கோவன்

வணிகம் வளர்க்க

ஸ்ரீ சாமுண்டீஸ்வரி
மகளிர் சுய உதவிக் குழு
திருப்பத்தூர் மாவட்டம்
கைபேசி : *99941 90546*
சணலில் செய்த பல்வேறு வகையான பைகள்

செந்தாமரை மகளிர்
சுய உதவிக் குழு
திருப்பத்தூர் மாவட்டம்
கைபேசி : *82482 09604*
பருத்தி மற்றும் பட்டு நூலில் செய்த வளையல்கள், காதணிகள், கழுத்தணிகள்

லாசல் பிளிசிங் மகளிர்
சுய உதவிக் குழு
திருநெல்வேலி மாவட்டம்.
கைபேசி : *82489 18594*
சாவிக் கொத்துகள்

கருப்பட்டி
உற்பத்தியாளர் குழு,
திருநெல்வேலி மாவட்டம்.
கைபேசி : *95669 96550*
பனை வெல்லம்

இமயம் மகளிர்
சுய உதவிக் குழு
திருநெல்வேலி மாவட்டம்.
கைபேசி : *88708 57748*
சிறுதானிய லட்டு

பனையோலை
உற்பத்தியாளர் குழு
திருநெல்வேலி மாவட்டம்.
கைபேசி : *94878 68737*
பனையோலையில் செய்யப்பட்ட சாவிக் கொத்து, தட்டுகள், அலங்காரப் பெட்டிகள்

ரஸியா மகளிர் சுய உதவிக் குழு
திருநெல்வேலி மாவட்டம்.
கைபேசி : *98433 86345*
பல்வேறு வகையான பாய்கள்

மகளிர் சுய உதவிக் குழுவை மேலும் வளர்க்க எண்ணுவோர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் இயங்கும் 'மதி சந்தை' (www.mathisandhai.com) எனும் வலைதளம் வழியே பொருட்களை வாங்கலாம்.

பொன்மகள் வந்தாள்

ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான பெற்றோர்கள் முதலீடு செய்துவரும் 'செல்வமகள் சேமிப்புத் திட்டம்' பற்றி தெரியுமா? தெரியாதவர்கள் இப்போது தெரிந்துக் கொள்ளலாம்.

திட்டத்தில் சேர்வது எப்படி?

10 வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ காப்பாளர் (Guardian) தங்கள் பிள்ளைகளின் பெயரில் கணக்கைத் துவங்கலாம். இந்திய குடிமக்கள் மட்டுமே கணக்குத் தொடங்க முடியும்.

நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும், ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிலும் இக்கணக்குகளைத் துவங்க முடியும். ஒரு குடும்பத்தில் அதிகபட்சம் இரண்டு பெண் பிள்ளைகளுக்கு முதலீடு செய்யலாம்.

தேவையான ஆவணங்கள்

- பெண் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ்
- பெற்றோர் அல்லது காப்பாளரின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

பாதுகாப்பான முதலீடு

இத்திட்டத்தின் குறைந்தபட்ச முதலீடு ஒவ்வொரு நிதியாண்டுக்கும் ரூ.250 மட்டுமே. பின்னர், ரூ.50-ன் மடங்குகளில் அதாவது ரூ.300, ரூ.350, ரூ.400 என முதலீடு செய்து வரலாம். மாதத்திற்கு, ஆண்டுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் செலுத்திக் கொள்ளலாம். மொத்தமாகவும் வைப்புத் தொகையைச் செலுத்தலாம். அதிகபட்சமாக ஒரு நிதியாண்டில் ரூ.1.5 லட்சம் வரை முதலீடு செய்ய முடியும்.

ஆண்டுக்குக் குறைந்தபட்சம் ரூ.250 முதலீடு செய்யவில்லை எனில், கணக்கு செயல்பாட்டிலிருந்து நீக்கப்படும். கணக்கை மீண்டும் தொடர அபராதம் செலுத்த வேண்டும். முதலீடு செய்யாத ஒவ்வோரு நிதியாண்டுக்கும் ரூ.50 வீதம் அபராதம் செலுத்த வேண்டும்.

ரொக்கப் பணம், காசோலை, வரைவு காசோலை, இணையவழி பண பரிவர்த்தனை ஆகியவை மூலமாக முதலீடு செய்யலாம். இக்கணக்கை குறிப்பிட்ட வங்கிகளில் ஆன்லைன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

எவ்வளவு காலம் முதலீடு செய்யலாம்?

திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகள் வரையிலும் முதலீடு செய்ய முடியும். உதாரணமாக, ஒரு பெண் பிள்ளைக்கு 8 வயதாகும் போது கணக்கைத் தொடங்கினால், அவர் 23 வயதை அடையும் வரை அந்தக் கணக்கில் முதலீடு செய்யலாம். இந்தக் கணக்கு 21 ஆண்டுகளுக்குப் பிறகே முதிர்ச்சியடையும். பெண் பிள்ளை 8 வயதாக இருக்கும்போது கணக்கு தொடங்கப்பட்டால், 21 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது அவர் 29 வயதை அடையும் போது முதிர்வு தொகையைப் பெறலாம்.

வருமான வரிச் சலுகை

செல்வ மகள் சேமிப்புத் திட்டத்தின் முழு முதலீட்டுக்கும் வருமான வரிச் சட்டம் - 1961, பிரிவு 80சி-இன் கீழ் ஒரு நிதியாண்டுக்கு ரூ.1.5 லட்சம் வரைக்கும் வரிச் சலுகை உண்டு. கூடுதலாக, திட்டத்தின் முதிர்வுத் தொகைக்கும் வருமான வரி இல்லை என்பதே திட்டத்தின் முக்கியச் சிறப்பம்சம்.

வட்டிக்கும் வட்டி உண்டு!

இத்திட்டம் தொடங்கப்பட்ட போது, ஆண்டுக்கு 9.6% வட்டி வழங்கப்பட்டது. தற்போது 8.2 சதவிகிதமாக வட்டி வழங்கப்படுகிறது. இந்த வட்டி விகிதம் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் ஒன்றிய நிதி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது. இதன் காரணமாக, வட்டி விகிதம் கூடவோ குறையவோ வாய்ப்புள்ளது.

நம் முதலீட்டுக்கான வட்டித் தொகை, நிதியாண்டின் இறுதியில் வரவு வைக்கப்படும். அடுத்தடுத்த ஆண்டுகளில், இந்த வட்டிக்கும் வட்டி (Power Of Compounding) உண்டு என்பது இத்திட்டத்தின் கூடுதல் சிறப்பு.

முன்னரே முதலீட்டைப் பெறுவது எப்படி?

- பெண் பிள்ளையின் வயது 18-ஐ பூர்த்தியடைந்த பிறகோ அல்லது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பின்னரோ, கல்விச் செலவுக்காக மொத்த வைப்புத் தொகையில் 50% மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

- இதற்கு, சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்ற சான்றிதழையோ அல்லது அங்கு செலுத்திய கல்விக் கட்டண ரசீதையோ சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்தத் தொகையானது மொத்தமாகவோ அல்லது தவணை முறையிலோ எடுத்துக் கொள்ளலாம். ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே எடுக்க முடியும். நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள்வரை இவ்வாறு முன்கூட்டியே பணம் பெறலாம்.

முன்கூட்டியே கணக்கை முடிக்கலாம்!

கணக்குத் தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு முன் கூட்டியே கணக்கை முடித்துக்கொள்ளலாம்.

- அதில் கணக்கு வைத்திருக்கும் பெண் பிள்ளை மரணிப்பது, கணக்கைப் பராமரித்து வரும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மரணிப்பது உள்ளிட்ட காரணத்திற்காகவும் மருத்துவ உதவி, உயிருக்கு ஆபத்தான முறையில் நோய் வாய்ப்பட்டிருப்பது உள்ளிட்ட காரணங்களுக்காகவும் கணக்கை முடித்துக் கொள்ள முடியும்.
- மேலும், பெண்ணுக்கு திருமணம் நடக்கவிருக்கும் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு அல்லது திருமணம் நடந்து முடிந்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு உள்ளாக கணக்கை முடித்துக் கொள்ளலாம். ஆனால், மூன்று மாதங்களுக்கு பிறகு கணக்கை முடிக்க அனுமதி கிடையாது.

- இவ்வாறு முன்கூட்டியே கணக்கை முடித்துக் கொள்ள, தேவையான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பொதுவான நெறிமுறைகள்

பெண் பிள்ளைக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை, பெற்றோர் அல்லது காப்பாளர்தான் இக்கணக்கை நிர்வகிக்க முடியும். 18 வயதிற்கு பிறகு, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து கணக்காளர் நிர்வகிக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படாது. மருத்துவ உதவி, தீவிர நோய் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களினால் முதிர்வின் போது கணக்கை முடிக்காத பட்சத்தில், அதுவரை சேர்ந்திருக்கும் தொகுப்பு நிதிக்கு சாதாரண சேமிப்புக் கணக்குக்கு இணையான வட்டித் தொகை (4%) வழங்கப்படும்.

செல்வமகள் சேமிப்புத் திட்டக் கணக்கை வேறு வங்கிகளுக்கோ, வேறு தபால் அலுவலகக் கிளைகளுக்கோ தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம்.

பெண் மரணிக்கும் பட்சத்தில், அந்தப் பணம் பெற்றோர் அல்லது காப்பாளருக்குக் கொடுக்கப்படும்.

இது பெண் பிள்ளைகளுக்கான சேமிப்பை ஊக்குவிப்பதோடு, பாதுகாப்பான சிறந்த முதலீட்டையும் உறுதி செய்கிறது. அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தை அணுகி இத் திட்டம் பற்றி விசாரித்துப் பயன்பெறுங்கள். இத்திட்டம் போன்றே, ஆண் குழந்தைகளுக்கும் 'பொன் மகன்' என்று ஒரு திட்டம் உள்ளது. அடுத்த இதழில் அது பற்றி அறிவோம்!

– பெ.ரமணஹரிஹரன்

தரவு தனியுரிமை: நவீன உலகின் தேவை!

வணக்கம் தோழிகளே,

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரைச் சேர்ந்த 60 வயதான ஒரு பெண்மணி. கணவரை விட்டு பிரிந்து மகன் மற்றும் மகளுடன் அவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் "யாருமா உள்ள, வெளிய வாங்க" எனும் சத்தம் கேட்டு வெளியே வந்தார்.

"ஏம்மா ஒரு கம்பெனி நடத்தினா வரி கட்டணும்னு தெரியாதா? நோட்டீஸ் அனுப்பினா பதில் சொல்ல மாட்டீங்களா?" என்று கேள்வி மேல் கேள்வியை அடுக்க, நிலைத் தடுமாறினார்.

"என்ன மேடம் சொல்லுரிங்க? நா எந்த கம்பெனியும் நடத்தலியே..."

"ஏன்மா சாந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) நீங்க தான? இது உங்க ஆதார் எண், வீட்டு முகவரி தான?"

"ஆமாங்க"

"நீங்க தாங்க 8 கோடி ரூபாய் வரி கட்டல. ஒழுங்கா வரிய சீக்கிரம் கட்டுங்க இல்லனா ஒவ்வொரு நாளுக்கும் 500 ரூபாய் வீதம் அபராதம் கட்ட வேண்டி வரும்" என்று கூறிவிட்டு சென்றுள்ளனர்.

அவர்கள் சென்றாலும் அவர்களின் குரல் சாந்தியின் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் காவல்துறையில் புகரளிக்க சென்றார். விசாரணையின் போது, இவரின் ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டைகளை வைத்து ஐஎஸ் எண்டர்பிரைசஸ் எனும் போலி நிறுவனம் ஒன்று இயங்கியுள்ளதை கண்டறிந்துள்ளனர்.

உன்னை போல் ஒருவர்

அடையாளம் ஒருவருக்கு இன்றியமையாத ஒன்று. அதே நம் அடையாளத்தைத் திருடி நம்மை போல யாரேனும் இயங்கி வந்தால்? அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தானே பொறுப்பு ஏற்க வேண்டியதிருக்கும்? முகநூலில் போலி கணக்கு தொடங்கி பணம் கேட்பது, புகைப்படங்களை எடிட் செய்து பணம் பறிப்பது, உங்கள் குரலையே எடிட் செய்து தெரிந்தவர்களுக்கு அனுப்பி பணம் பறிப்பது என்று அடையாள திருட்டின் வடிவம் மாறிக் கொண்டே இருக்கிறது.

இன்றைய நவீன உலகில் 'எனக்கு உடனடியா 10 ஆயிரம் ரூபாய் வேணும். நான் சொல்லுற நம்பருக்கு அனுப்பு' என்று உங்கள் குரலில் ஏன் உங்கள் குடும்பத்தினர் குரலில் கூட உங்களுக்கு அழைப்பு கொடுத்து பேச முடியும். வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவில் (Artificial Intelligence) உங்கள் குரல் முகம் கைரேகை என்று அனைத்தையும் போலி செய்து, அது நீங்கள் தான் என்று உங்களையே நம்ப வைக்க முடியும்.

ஆகையால், இணையவழி குற்றவாளிகளின் வலையில் சிக்காமல் இருக்க 'தரவு தனியுரிமை' (Data Privacy) பற்றி தெரிந்துக்கொள்வது கட்டாயம்.

தரவு தனியுரிமை என்றால் என்ன?

உங்களின் அடையாளம் (அ) உங்களுக்கு மட்டுமே உரிய தனிப்பட்ட தரவுகளை குறிப்பது தான் தரவு தனியுரிமை. எடுத்துக்காட்டாக:

- குரல், முகம், கைரேகை, கையெழுத்து.



- புகைப்படம் மற்றும் தொடர்பு எண்.
- அடையாள அட்டை (ஆதார், பேன் கார்டு, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அட்டை)
- அரசு ஆவணங்கள் (பிறப்பு சான்று, பள்ளி, கல்லூரி தொடர்பான சான்றிதழ்கள்)
- வங்கிக் கணக்கு விவரம், தானியங்கி அட்டை (ATM Card) சொத்துக்கள், வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள்.

தரவு கசிவு நடப்பது எப்படி?

பலவகைகளில் தரவுகளைப் பெற முடியும். குறிப்பாக,

- கடவுச்சொல் இல்லாத பொது வைஃபை (Open WiFi) பயன்படுத்தும் போது,
- கட்டண இணையதள மையத்தில் கணினி பயன்படுத்தும் போது,
- கடவுச்சொல் பயன்படுத்தாமல் இருப்பது, தரவுகளை விற்கும் இணையதள நிறுவனம் மூலம் பெறுவது,
- தெரியாத செயலி, லிங்க், எண்களுக்கு உங்களின் தரவுகளை அனுப்புவது/ பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பது.

தரவுகள் கசியாமல் காப்பது எப்படி?

வலிமையான கடவுச்சொல் – குறைந்தது 8 எழுத்துக்கள் கொண்ட கடவுச்சொல் அமைக்கவேண்டும், அதிலும் வெவ்வேறு சாதனம் மற்றும் கணக்குகளுக்கு வெவ்வேறு கடவுச்சொல், அடிக்கடி கடவுச்சொல்லை புதுப்பிக்க வேண்டும்.

இரண்டு காரணி அங்கீகாரம் (Two – Factor Authentication) – மின்னஞ்சலுக்கு கடவுச்சொல் போட்டதும் உங்கள் அலைபேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தி வரும்.

தரவு குறியாக்கம் (Data encryption) – நீங்கள் அனுப்பும் செய்திகள், புகைப்படங்கள் என்று உங்கள் தகவல்கள் எதை வேண்டுமானாலும் குறியாக்கம் செய்துக் கொள்ளலாம்.

ஆதார் எண் – பிறர் பயன்படுத்துகிறார்களா?

- உங்கள் ஆதார் எண்ணை நீங்கள் அல்லாது வேறு யாரேனும் பயன்படுத்துகார்களா என்று கண்டறிவது அவசியம்.
- எனது ஆதார் (MyAadhar) வலைதளத்திற்கு செல்லுங்கள். உங்கள் பதிவு செய்யப்பட அலைபேசி எண்ணையும், அதில் இருக்கும் குறியீடுகளையும் உள்ளீடு செய்க. பிறகு ஒருமுறை கடவுச்சொல் (OTP) வரும் அதையும் உள்ளீடு செய்க.
- அங்கீகார வரலாறு (Authentication History) என்பதை அழுத்தி, காலவரையறையை உள்ளீடு செய்யவும்.
- நீங்கள் செய்யாத/ சந்தேகிக்கும் படி ஏதேனும் பரிவர்த்தனையில், நிறுவனத்தில் உங்கள் ஆதார் எண் பயன்படுத்தப்பட்டு இருந்தால், உடனே UIDAI–க்கு புகாரளிக்கவும்.

மென்பொருளைப் புதுப்பிப்பு (Update) செய்துக் கொண்டே இருக்க வேண்டும்.

மின்னஞ்சல் மற்றும் சமூக வளைத்தள கணக்குகளை உங்கள் மொபைல் அல்லது கணினி அல்லதா பிற சாதனங்களில் பயன்படுத்திய பிறகு வெளியேறி விடுங்கள் (Logout/sign out).

ஆதார் எண், வங்கி விவரம் போன்ற முக்கிய தகவல்களைக் கொடுக்கும் போது கூடுதல் கவனத்தோடு இருக்க வேண்டும்.

தானியங்கி அட்டையின் கடவுச்சொல்லை பிறரிடம் பகிரக்கூடாது. சந்தேகிக்கும் படியாக உங்கள் வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்டாலோ, கணக்கில் இருந்து பணம் பெறப்பட்டாலோ கணக்கு விவரத்தை சரி பாருங்கள், தேவையெனில் வங்கியில் தெரிவியுங்கள்.

'என்னிடம் பெரிய பணமேதுமில்லை, அப்படி எத பெருசா திருடிட போறாங்க' என்று அலட்சியமாக இருந்திட வேண்டாம். ஒவ்வொரு குழுவும் எப்பாடுபட்டு கடன் வாங்கி தொழில் செய்கிறீர்கள் என்று உங்களுக்கே நன்றாக தெரியும்.

முறையாக தரவுகளைப் பாதுகாக்கவில்லை என்றால், பணம் மட்டுமல்லாமல் நீங்கள் உருவாக்கும் அடையாளமும் காணாமல் போகும் அபாயம் உள்ளது. அறிவார்ந்து செயல்படுவோம்!

–ப. க. புகழ்ச்செல்வி

பிறப்பொக்கும்

ஆசிரியர் குறிப்பு

லக்ஷ்மி பாலகிருஷ்ணன்

சென்னையில் பிறந்து தஞ்சையில் வளர்ந்தவர். மென்பொருள் துறையில் பணிபுரிந்தவர். சிறப்புக் கல்வி ஆசிரியராகவும், மனநல ஆலோசகராகவும் இயங்கி வரும் இவர் எழுதாப்பயணம், ஆனந்தவல்லி, மானசா, நெல் விளைந்த கதை போன்ற நூல்களை எழுதியுள்ளார். தற்போது சென்னையில் வசிக்கிறார். கல்லூரிக் காலம் முதலே கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என இலக்கியத் துறையில் இயங்கி வருபவர்.

ஓவியங்கள்:

துர்கா

முதல் டிகாஷனின் கசப்பும், வீட்டுப் பசுவின் பாலின் சுவையுமாக அம்மா தந்த அந்தக் காலை காபி அமர்க்களமாக இருந்தது.

"ஏ ஒன் காபிம்மா. அதெப்படிம்மா உன் கைக்கு மட்டும் இப்படி ஒரு ருசியும், மணமும் வாய்க்குது?" சப்புக் கொட்டிக் கொண்டே அம்மாவிடம் கேட்டேன்.

"சரிதான் போடா... எதையாவது உளறாதே..." என்று செல்லமாய் சொல்லிவிட்டு காலி டம்ப்ளரை வாங்கிக் கொண்டு சமையற்கட்டிற்கு திரும்பினாள் அம்மா.

ஒரு பதினைந்து ஆண்டுகளாவது ஆகியிருக்கும் – நான் இப்படி நிதானமாக ஆற அமர எங்கள் கிராமத்து வீட்டில் தங்கி. பள்ளியிறுதி வரை உள்ளூர் அரசுப் பள்ளியில்தான் படித்தேன். பக்கத்து நகரிலிருக்கும் கல்லூரிக்குக் கூட இங்கிருந்துதான் பஸ்ஸில் தினசரி போய் வந்து கொண்டிருந்தேன். வேலை கிடைத்து சென்னை போன போது மாதக் கணக்கில் ஊரையும், அம்மா அப்பாவையும் பிரிந்து இருக்க முடியாமல் ஆரம்பத்தில் பட்ட அவஸ்தைகள் எல்லாம் மெல்ல மெல்ல வேலை தந்த சுவாரசியங்களில் புதைந்து போனது. திருமணமான பின் குடும்பத்தின் கிளையலுவலகமாய் சென்னையிலேயே தனிக்குடித்தனமும் போட்டாயிற்று. ஆரபி பிறந்த பின்னரும் கூட வருடம் ஒன்றிரண்டு முறை வந்து போய்க் கொண்டு இருந்த பயணங்களின் தொடர்ச்சி எப்போது நின்றது என்று யோசித்துக் கொண்டே குளியலை முடித்துக் கொண்டு வந்தேன்.

சூடான தோசை இளம் குருத்தான வாழையிலையில் விழும் போது லேசாய் இலை வெந்து போகும் மணம் நாசியை நிறைத்தது. இளம் பச்சை நிறத்தில் மினுக்கும், ஸ்பிரிங் போல ஓரம் சுருண்டு கொள்ளும் குருத்து வாழையிலையைக் கண்ணால் பார்த்தே எத்தனை வருடமாயிற்று. அப்பா ஒரு போதும் தட்டில் சாப்பிட மாட்டார். எப்போதும் வாழையிலைதான். மழை நாளில் வாழைத் தோப்புகள் இருக்கும் ஆற்றின் அக்கரைப் படுகைக்குப் போய் வர முடியாது என்பதால் வாழையிலையை வெய்யிலில் காயவைத்து சருகாக பத்திரப் படுத்தி வைத்திருப்போம் வீட்டில். தேவையான போது கட்டிலிருந்து ஒரு சருகை உருவி தண்ணீரில் நனைத்தால் இலை தயார். மழை நாட்களில் பெரும்பாலும் அந்த சருகிலையில் வற்றல் குழம்பு சாதமும், காய்கறிகள் இல்லாததால் தொட்டுக் கொள்ள அப்பளமுமாக வாரக் கணக்கில் சாப்பிட்டாலும் கூட அலுக்கவே அலுக்காத சுகம்.

வேலையில் மேலும் மேலும் என்று எட்டிய உயரங்கள் கொடுத்த சலுகைகளாய் சென்னையில் பெரிய பங்களாவும், காரும் இன்ன பிற

சவுகரியங்களும் நிறைந்திருந்தாலும் பிறந்து புழுதியளைந்து விளையாடிய இந்த மண்ணில் நிற்கையில்தான் என்னை நான் முழுமையானவனாக உணர முடிவது புரிந்தது.

மொறுகல் தோசையும் வெங்காயச் சட்னியுமாக காலைச் சிற்றுண்டியை முடித்தேன்.

"அம்மா இன்னொரு கப் காபி கிடைக்குமா?" சத்தமாய் அடுக்களை நோக்கி குரல் கொடுத்தேன். ரெண்டே நிமிடத்தில் காபி டம்பளருடன் அம்மா வந்தாள்

"ஏண்டா அம்பதை தொடறதுக்குள்ள பிபி, சுகர்னு சகலத்தையும் உடம்புல சம்பாதிச்சு வச்சிருக்கே. உன் பொண்டாட்டிக்கு இப்படி நான் ரெண்டாவது காபியும், மூனாவது காபியும் தர விஷயம் தெரிஞ்சால் இப்படி என்னிக்கோ ஒரு நாள் நீ இங்க வரதையும் நிப்பாடிரப் போறா" சிரித்துக் கொண்டே சொன்னாலும் அடிக்கடி வருவதில்லையே என்ற ஏக்கம் அதில் நிழலாடுவதை உணர முடிந்தது.

"நீ வேறம்மா. வேலை என்னை இருபத்திநாலு மணி நேரமும் பிச்சுத் தின்னுகிட்டிருக்கு. நீ இங்க வரலைன்னு குறைப்படறே. அங்க மெட்ராஸிலேயே தாரிணி நான் வீட்டுக்கே நேரத்துக்கு வரதில்லைன்னு புலம்பிகிட்டிருக்கா. லீவு நாள், பண்டிகைன்னு எதுக்கும் வீடு தங்க முடியறதில்லை. முதல் நாலஞ்சு வருஷத்துக்கப்புறம் எங்க கல்யாண நாள், ஆரபி பிறந்த நாளெல்லாம் கூட எனக்கு சரியா நினைப்பு வரதே இல்ல. என்னிக்காவது ஒரு நாள் அரை நாள் நிம்மதியா வீட்டுல உக்காந்தா போதும் உன் மருமக பொறிச்சு கொட்ட ஆரம்பிச்சுருவா… என்ன செய்யம்மா?"

"சரி,சரி.ஒன்பொண்டாட்டியும்பொண்ணும்வரநேரம்தான்.நீ பாட்டுக்கு இப்படி எதுனா பேசிகிட்டிருந்தா அவ காதுல விழுந்து பிரச்சனையாயிறப் போகுது." அம்மாவுக்கு எத்தனையோ வருடம் கழித்து நான்கு நாட்கள் சேர்ந்தாற்போல தங்க நான் குடும்பத்தோடு வந்திருப்பதில் ஏக சந்தோஷம். அது எந்தவிதத்திலும் கெடுவது போல் பிரச்சனைகள் வந்துவிடக் கூடாது என ரொம்பவே கவனமாக இருந்தாள்.

தாரிணியின் அம்மா வழி உறவுக்காரர்கள் எங்கள் ஊரில் நான்கைந்து பேர் இருந்தனர். எங்கள் திருமணம் நிச்சயமானதே அவர்கள் மூலம்தான். எனவே நேற்று வந்து இறங்கியதிலிருந்தே காலையும் மாலையும் ஒரு மணிநேர திக்விஜயம் செய்வது என்று முடிவு செய்திருந்தாள். இன்றைய காலைச் சுற்றுலாவுக்கு மகளையும் கூட்டிக் கொண்டு போனவள்தான் – மதிய உணவு தயாராவதற்குள் வந்துவிடுவாள்.

அம்மாவின் பதட்டம் புரிந்து புன்னகைத்தேன்.

"சரிம்மா, மதியம் என்ன மெனு?"

"எல்லாம் உனக்கு பிடிச்ச ஐட்டங்கள்தான்." உண்மையில் இந்திய உணவு வகைகளில் எனக்கு பிடித்த ஐட்டங்கள் என்னவென்று எனக்கே மறந்து போகத் துவங்கியிருந்தது. நினைத்த நேரத்தில் வெளிநாட்டுப் பயணம், உள்ளூரிலும் ஸ்டார் ஹோட்டல்களில் மட்டுமே புழக்கம். எப்போதும் உணவு நேரத்தில் யாரேனும் ஒரு க்ளையன்ட்டோ இல்லை மேலதிகாரியோ பக்கத்தில். எனவே கவனமெல்லாம் உணவின் மீது துளியும் படிவதில்லை. உள்ளூர் வாசம் செய்யும் நாட்களிலும் கூட தாரிணி குறைபட்டுக் கொள்வது போல் திருடன் நுழையும் நேரத்தில் வீட்டில் நுழைந்து பேய் சாப்பிடும் வேளையில்தான் சாப்பிட வாய்க்கிறது. என்னதான் ஹாட்பேக்கில் பதுக்கி வைத்தாலும் நான் வரும் நேரத்தில் அது ஆறி அவலாகத்தான் இருக்கும். இதோ நேற்றிலிருந்து அம்மாவும் அசராமல் விதம் விதமாய் சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

"மதியத்துக்குள்ள பரசு மாமா வந்துருவாரில்லம்மா?"

"ஆமாடா, விடிகாலைல கிளம்பிப் போனவன். நாளைக்கு பூஜைக்குத் தேவையான எல்லா சாமனும் வாங்கி முடிச்சுட்டுத்தானே வரணும். ம்ம்…. நல்ல வேளையா உள்ளூர்லயே எந்தம்பியும் இருக்கப் போய் நான் உங்கப்பா மாதிரி ஒரு பொறுப்பத்த மனுஷனுக்கு வாழ்கப்பட்டும் கூட பொழப்ப ஓட்ட முடியுது. எது ஒன்னுக்கும் அவனத்தான் தொந்தரவு

இளம் பச்சை நிறத்தில் மினுக்கும், ஸ்பிரிங் போல ஓரம் சுருண்டு கொள்ளும் குருத்து வாழையிலையைக் கண்ணால் பார்த்தே எத்தனை வருடமாயிற்று. அப்பா ஒரு போதும் தட்டில் சாப்பிட மாட்டார். எப்போதும் வாழையிலைதான்.

பண்ண வேண்டியிருக்கு."
சமையற்கட்டை நோக்கி நடந்து கொண்டே அம்மா சொல்லிக் கொன்டு போனது மெல்ல மெல்ல தேய்ந்து போனது.
நாளை நடக்கவிருக்கும் எங்கள் குலதெய்வ வழிபாட்டுக் காகத்தான் இந்த பயணமே. தாரிணியின் உடல் நலம், என் தொழில் சிக்கல்கள், அடுத்து ஆரம்பிக்க வேண்டிய ஆரபியின் திருமண முயற்சிகள் எல்லாம் நல்லபடி நடக்க வெகுநாட்களாய் செய்யாதிருந்த குலதெய்வ பூஜையை நடத்தியே ஆக வேண்டும் என அம்மா தொடர்ச்சியாய் ஒவ்வொரு முறை ஊருக்கு தொலைபேசும் போதும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

கிறிஸ்மஸ்ஸையும், புதுவருடப் பிறப்பையும் உள்ளிட்ட நீண்ட விடுமுறைக் காலம் எங்கள் வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும் கொண்டாட்ட நேரம். எனவே எங்களுக்கு அவர்களிடமிருந்து ஏதும் வேலை வராது. ஆனால் அந்த நாட்களில் மிச்சமிருக்கும் எல்லா சில்லறை வேலைகளையும் முடித்துக் கொண்டு நிமிர்ந்தால் அந்தப்புறம் வெள்ளைத் தோல் எஜமானர்கள் ஏகத்துக்கும் புத்துணர்ச்சியோடு திரும்பி வந்து கசக்கிப் பிழிய தயாராகிவிடுவார்கள். ஆனால் இந்த முறை அந்த நேரத்தில் எப்படியும் போராடி விடுமுறை எடுத்துக் கொண்டு குடும்பத்தோடு செலவழிக்க வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்திருந்தேன். எனவே அந்நேரத்தில் இந்த பூஜைக்கு ஏற்பாடு செய்யுமாறு அம்மாவிடம் சொல்லியிருந்தேன். இதோ கிளம்பி வந்து சாவகாசமாய் சொந்த ஊரின் சொகுசுகளையும், அம்மா கைச் சமையலையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.
பரசு மாமாவின் புல்லட் சத்தம் கேட்டது. தொடர்ந்து வியர்த்து வழியும் உடலுடன் தன் எட்டுமுழ வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு இரண்டு கைகளிலும் பிதுங்கி வழியும் பைகளைச் சுமந்தபடி வேகுவேகென்று மாமா உள்ளே வந்தார்.

எழுந்து போய் அவரது கைச்சுமைகளில் ஒன்றை வாங்கி கொண்டேன். மாமாவின் குரல் கேட்டதுமே அவருக்கான காபியைக் கலந்து எடுத்துக் கொண்டு அம்மாவும் கூடத்துக்குள் வந்தாள்.

"என்னடா, எல்லா சாமானும் வாங்கியாச்சா?"

"ஆச்சுக்கா. மாலை, அர்ச்சனைக்கு உதிரிப்பூ எல்லாத்துக்கும் நம்ம ஆவுடைகிட்ட நேத்தே சொல்லிட்டேன். நேரா காலைல கோவிலுக்கே கொண்டு போய் கொடுத்திருவா. பூசாரி வீட்டுலதான் ஏற்கனவே சொல்லியாச்சே, இருந்தாலும் வரப்ப ஒரு குரல் கொடுத்துட்டு வந்துட்டேன். அவரு பையன இன்னிக்கு சாயந்தரமே அனுப்பிருவார். நீ அவங்கிட்ட அரிசி, பருப்பு சாமானெல்லாம் கொடுத்து விட்டுரு. சேவலையும், ஆட்டுக் குட்டியையும் மட்டும் நாம் போறப்ப கொண்டு போலாம்."

நீளப் பேசிக் கொண்டே அம்மாவிடமிருந்து காபியை வாங்கி ஆற்ற ஆரம்பித்தார். அம்மா அவர் கொண்டு வந்த பைகளைப் பிரித்து எதற்கும் ஒரு முறை சரி பார்த்து அடுக்க உட்கார்ந்தாள்.

"முக்கியமான சாமன்கள் சிலது மட்டும் நாளைக்கு கோவிலுக்குப் போற வழில அப்படியே வாங்கிட்டுப் போயிரணும்" என்னைப் பார்த்து கண்ணடித்துக் கொண்டே சொன்னார்.

ஆம், எங்கள் குலதெய்வமான பாவாடைராயன் நல்ல அசைவப் பிரியர் மட்டுமல்ல. சுருட்டு, பொடிமட்டை, சாராயம், கள்ளு என சகல லாகிரி வஸ்துக்களும் அவருக்குப் படைக்கப்பட வேண்டும். அப்பாவோ அவ்வஸ்துக்களை வீட்டுக்குள்ளேயே சேர்க்காத ஆசாமி. எனவே கோவிலுக்குப் போகும் வழியில் அவைகளையெல்லாம் வாங்கிக் கொண்டு போவோம். அல்லது பண்ணையாள் யாரையேனும் வாங்கிக் கொண்டு நேராக கோவிலுக்கு வரச் சொல்லிவிடுவோம்.

மறுநாள் விடிகாலை எழுந்து எல்லோரும் குளித்து

முடித்து காரில் ஏறினோம். முன்னால் சென்ற பரசு மாமாவின் புல்லட்டைத் தொடர்ந்து வண்டியை செலுத்திக் கொண்டிருந்தேன். எங்கள் ஊரிலிருந்து குலதெய்வக் கோவில் இருந்த மாத்தூருக்கு காவிரியின் கிளை நதிகள் மூன்றையும், பின்னர் காவிரியையும் தாண்டி கொஞ்சம் சுற்றிக் கொண்டு போக வேண்டும். போகும் வழியெல்லாம் அப்பா டூரிஸ்ட் கைடாகத் தன்னை பாவித்துக் கொண்டு என் மகளுக்கு ஒவ்வொன்றாய் விளக்கிக் கொண்டிருந்தார். என் மகளும் விவரம் தெரிந்த நாள் முதலாய் சென்னையிலேயே வாழ்பவள் என்பதால் நெல் எந்த மரத்தில் காய்க்கும் என்கிற அளவில் அப்பாவியாய் கேள்வி கேட்க என் அப்பா தன்னை ஒரு அப்துல் கலாமாக நினைத்துக் கொண்டு அவள் அறிவுக்கண்ணை விரிய வைத்துக் கொண்டே இருந்ததார்.

நான்காவது பாலமான காவிரிப் பாலத்தையும் தாண்டி கும்பகோணம் செல்லும் சாலையில் ஏறும் போது நேர் எதிரில் ஒரு பெரிய பொட்டல் மைதானம் ஒன்று உண்டு. மைதானத்தை அடுத்து வருவது மெய்யப்பச் செட்டியின் எண்ணெய் செக்கு. சிறு வயதில் அப்பாவோடு செக்கிற்கு வரும்போது இந்த மைதானத்தில் ஆங்காங்கே கட்டிப் போடப்பட்டிருக்கும் மாடுகள் வினோதமான குரலில் கத்திக் கொண்டிருப்பது வேடிக்கையாக இருக்கும். ஏனென்று கேட்டாலும் அப்பா அதைத் தவிர்க்கும் விதமாக வேறு ஏதாவது பேச்சை மாற்றிவிடுவார். சில சமயங்களில் வீட்டிலிருக்கும் பசுமாடுகளும் சில சமயங்களில் அதே போல் வினோத ஒலி எழுப்புவதும் மறுநாளே பண்ணையாட்கள் யாரையாவது விட்டு இங்கே ஓட்டி வரச் சொல்வதையும் கவனித்திருக்கிறேன். எனவே எதோ வியாதி போல, இங்கே மருத்துவத்திற்கு அழைத்து வருகிறார்கள் என்று புரிந்து வைத்திருந்தேன். விவரம் புரியத் துவங்கியதும்தான் அந்த கத்தல் இனப்பெருக்க விழைவுக்கானது என்பதையும், இங்கே மைதானத்தின் கோடியில் இருக்கும் ராமுக் கோனார் வீட்டில் இருக்கும் பொலி காளைகளிடம் விடுவதற்காகவே இந்த பசுக்கள் இங்கே ஓட்டி வரப்படுகின்றன என்பதையும் ஊகித்துப் புரிந்து கொண்டேன். பாலத்தில் வரும்போதே இதையெல்லாம் யோசித்துக் கொண்டு லேசான புன்னகையுடன் காரை கும்பகோணம் பாதையில் திருப்பியவாறே மைதானத்தின் பக்கம் பார்த்தேன்.

மைதானம் என்னவோ அப்படியேதான் இருந்தது. ஆனால் மாடுகள் எதுவுமேயில்லாமல் வெறுமையாக இருந்தது. பக்கத்திலிருந்த செக்கும் அதை ஒட்டிய செட்டியாரின் எண்ணெய், புண்ணாக்கு விற்கும் கடையும் காணாமல் போய் அங்கே சற்று நவீனமான ஒரு மளிகைக் கடை புதிதாய் முளைத்திருந்தது.

என்னப்பா பொட்டல் காலியாக் கிடக்கு? ராமுக் கோனார் மாடு எதுவும் இப்ப வச்சுக்கலையா?

உங்க பட்டணம் அளவுக்கு எல்லாத்துலயும் நவீனமா மாறிடலைன்னாலும், ஊரெல்லாம் மட்டும் அப்படியே உறைஞ்சு போயிருக்கும்னா நினைச்சுகிட்டிருக்க? இப்பல்லாம் யாருப்பா மாட்டை பொலிகாளை கிட்ட விட்டு சினைப் பிடிக்க வச்சுகிட்டிருக்காங்க? மாட்டாஸ்பத்திரிக்கு ஓட்டிகிட்டுப் போனா ஒரு ஊசில மாடு சினைப்பட்டுருது. அதுலயும் நல்ல சீம மாட்டு வித்தா பாத்துல்ல சேத்து வச்சிருக்காங்க, அதுனால கன்னுகுட்டிகளும் நல்லா இருக்குதுங்க. நீ காலேஜ் போறப்பல்லாமே நாம மாடுங்கள இங்க ஓட்டி வரத நிறுத்தி, உள்ளூர் மாட்டாஸ்பத்திரிக்கு கொண்டு போக ஆரம்பிச்சுட்டோமே, உனக்கு கவனமில்ல போல?

அவருமே கூட அதன் இயற்கையான இணை விழைவை தடுப்பது தவறில்லை என்று நினைப்பது ஆச்சரியம்தான். அவரவர்க்கு அவரவர் நியாயங்கள்.

ஆமாப்பா, ஆனா அப்பவும் கூட அதெல்லாம் நல்லதில்லன்னு நம்ம சுப்பு மாமா மாதிரி கொஞ்சம் பேர் இங்கதானே வந்துகிட்டிருந்தாங்க?

எவ்ளோ நாளைக்கு பிடிவாதமா முரண்ட முடியும்? அத்தோட ஊருக்கு ரெண்டு பேர் பசு ஓட்டிகிட்டு வரதை நம்பி ராமுக் கோனார் காள வளக்க முடியாதில்ல?

அதுவும் சரிதான் என்று ஆமோதித்தாலும் கூட உள்ளுக்குள் கொஞ்சம் குறுகுறுப்பாய் இருந்தது. பொதுவாய் பிரசவத்திலோ அதைத் தொடர்ந்தோ கன்றுக்குட்டி இறந்துவிட்டாலும் பசுவிடமிருந்து தொடர்ந்து பால் கறக்க தோல் கன்றுகுட்டி செய்து அதனுள் வைக்கோல் அடைத்து அதை மாட்டிடம் காண்பித்து பால் சுறக்க வைப்பது எல்லா இடத்திலும் வழக்கம்தான். ஆனால் அதையே அப்பா கூடாது என நினைப்பவர் - வாயில்லா ஜீவன் என்பதற்காக அதன் தாய்ப்பாசத்தை கேவலப்படுத்தக் கூடாது என்று சொல்பவர். அவருமே கூட அதன் இயற்கையான இணை விழைவை தடுப்பது தவறில்லை என்று நினைப்பது ஆச்சரியம்தான். அவரவர்க்கு அவரவர் நியாயங்கள். மெல்லிய பெருமூச்சுடன் பாதையில் கண்ணைப் பதித்தேன்.

கோவிலுக்குப் போகும் பாதையின் முனையிலேயே காரைப் பார்க் செய்துவிடச் சொன்னார் அப்பா. அங்கிருந்து ஓரிரு நிமிட நடையில் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். வெகு நாட்கள் கழித்து கோவிலின் உள் நுழைந்த பரவசம் அம்மாவின் முகத்தில். நாங்கள் போய் இறங்கியதும் விறுவிறுவென பூசாரி

சுப்பையா வேலைகளை ஆரம்பித்தார். முதலில் ஆட்டையும், கோழியையும் பாவாடைராயன் சன்னிதிக்கு நேர் எதிரில் சற்றுத் தொலைவில் நடப்பட்டிருக்கும் வேலின் அடியில் பலியிட்டு ரத்தத்தை ஓரிரு சொட்டுக்கள் வேலின் மேல் தடவினார். பின்னர் அவற்றை சமையலுக்காக தன் மருமகளிடம் கொடுத்துவிட்டு கிணற்றடிக்குப் போய் குளித்துவிட்டு வந்து ஈர வேட்டியுடன் அபிஷேகத்தை துவங்கினார்.

அபிஷேகம் முடித்து, அர்ச்சனையை முடிக்கவும் அவர் வீட்டினர் சமையலை முடித்து பதார்த்தங்களை கொண்டு வந்து சன்னிதியில் இலை போட்டு அடுக்கவும் சரியாக இருந்தது. அடுத்து தீபாராதனையும் காட்டி இலையை சாமிக்கு படைத்தார். பின் எல்லோருக்கும் திருநீறு பூசினார். பிறகு பிரசாத உணவை சிறு இலைக் கிழிசல்களில் தர, அங்கேயே சன்னிதியில் உட்கார்ந்து சாப்பிட்டு பின் வீட்டுக்கு கிளம்பினோம்.

பக்திப் பரவசமும் இனி எல்லாம் நல்லதே நடக்கும் என்ற நிம்மதியுமாக அம்மாவின் முகம் விகசித்திருந்தது. தாரிணியும் கூட வழக்கமான தனது உடல்நலப் புலம்பல்களை நிறுத்திவிட்டு வேறு வேறு விஷயங்களைப் பற்றி பேசியபடி கலகலவென வந்தாள். திடீரென நினைத்துக் கொண்டவராய் அப்பா அபிஷேகத்தின் பின் அலங்காரத்திற்காக காத்திருந்த நேரத்தில் பரசு மாமா பேசிய விஷயத்தை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.

"நம்ம வங்காரம்பேட்ட திருநாவு இல்ல, அவன் பரசுவ முந்தாநாள் தேங்காவெட்டு விஷயமா பாக்கவந்தானாம். அப்ப உங்க அக்கா மகன் குடும்பத்தோட வந்திருக்கானாமே, அவன் பொண்ணையும், சம்சாரத்தையும் மாரியம்மன் கோவில்ல வச்சுப் பாத்தோம். என் கடசீப் புள்ள குமரேசனுக்கு அந்தப் பொண்ணு பொருத்தமாயிருக்கும்னு தோணிச்சு. அவனும் நல்ல கம்ப்யூட்டர் படிப்பு படிச்சுட்டு வெளிநாட்டுல வேலபாத்து கை நிறைய சம்பாதிக்கறான். எங்க அந்தஸ்து, சொத்து சொகம்னு எல்லா விவரமும் உனக்கும் உங்கத்தானுக்கும் நல்லாவே தெரியும். அதுனால யோசிச்சுப் பாத்து சரின்னா சொல்லுங்க, ஜாதகம் கொடுத்துவிடறேன்னு சொன்னானாம்."

அந்த திருநாவுக்கரசு தாரிணிக்கும் ஒரு விதத்தில் உறவுதான். நல்ல பரம்பரை பணக்காரர்கள்.

"பாத்தீங்களா, குலதெய்வ தரிசனம் பண்ணின ஒடனே நல்ல விஷயமா பேச்சு வருது பாருங்க" என்று குதூகலமாய் தாரிணி என் பக்கம் குரலை அனுப்பியதிலேயே தெரிந்தது அவளுக்கு இந்த சம்பந்தத்தில் ஆர்வமிருக்கிறது என்று. ஆரபி இப்பேச்சைக் கேட்டதும் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டாள். அவளுக்கு மேற்படிப்புக்கு பூலோக வைகுண்டமான அமெரிக்கா செல்ல ஆசை. அதற்கான தேர்வுகளுக்குத் தீவிரமாகத் தயார் செய்து கொண்டிருந்தாள். ஜிஆர் ஈ ஸ்கோர் என்றும், எந்தெந்த பல்கலைக்கழகங்களில் எவ்வளவு தூரத்துக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும் என்றும் தோழிகளுடன் பரபரத்துக் கொண்டிருப்பவள் அவள். இந்த கல்யாணப் பேச்சைக் கேட்டதும் கன்னம் சிவந்து, கால்விரலால் தரையில் கோலமிடுவாள் என்று எதிர்பார்க்க முடியாதுதான்.

தாரிணிக்கு தன் பக்கத்து சொந்தத்திலிருந்து வரும் மாப்பிள்ளை என்கிற ஆர்வம். ஆனால் என் மனநிலை என்னவென்று எனக்கே சரியாகத் தெரியவில்லை. பெண் அடிவயிற்று நெருப்பு, காற்றிலும் கூட கிழிந்துவிடும் வாழையிலை என்றெல்லாம் காலகாலமாய் கேட்டுக் கேட்டு வளர்ந்ததினால் அவளது கல்யாணம் என்பது ஏதோ என்னுடைய தலை மேல் உட்கார்ந்திருக்கும் பாறை போலவும், விரைவில் ஒரு சுமைதாங்கியைக் கண்டுபிடித்து அதை



இறக்கி வைத்துவிட வேண்டும் என்றும் சில சமயங்களில் தோன்றுகிறதுதான்.

ஆனால் ஆரபியை, அவள் புத்திசாலித்தனத்தை, படிப்பு, இசை, இலக்கிய ரசனை என்று அஷ்டாவதானியாக அவள் பரிணமிப்பதை பார்த்து பிரமிக்கும் நேரங்களில் ஒரு குழந்தையை வளர்ப்பதும், நல்ல கல்வி தருவதும் மட்டுமே நம் கடமை. அதற்கு மேல் இந்தக் கல்யாணம் பண்ணி வைப்பது மாதிரியான அதிகப்பிரசங்கித் தனமெல்லாம் தேவையற்றது என்பதை உணர்கிறேன்.

நான் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து வைத்திருக்கும் போது கூட நான் செலவழித்து அவளை வெளிநாடு அனுப்ப வேண்டும் என்று துளியும் எதிர்பார்ப்பதில்லை. அப்படியிருக்க அவள் திருமணம் என்பது அவளாய் காதல் ஒருவனைக்

கண்டு கொண்ட பின்பல்லவா நடக்க வேண்டும்? இன்னமும் அம்மாவோடு சேர்ந்து கொண்டு தாரிணியும் "பெண்ணை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்க" தவிப்பது கொஞ்சம் பரிதாபமாகத் தோன்றியது.

அப்பா தகவல் தெரிவிப்பதோடு தன் கடமை முடிந்து விட்டது போலவும், முடிவெடுக்க வேண்டியது நானும் தாரிணியும் மாத்திரமே என்பது போலவும் மௌனமானார். அம்மாவின் முகத்திலும் தீவிரமான சிந்தனைக் கோடுகள். தன் குதூகலக் குரலுக்கு யாரிடமிருந்தும் எதிரொலி இல்லை என்பது கண்ட தாரிணியின் முகத்திலும் லேசான சிடுசிடுப்பு. மெல்ல இறுக்கத்தைக் குறைக்கும் விதமாக பேச்சை ஆரம்பித்தேன்

என்னம்மா... ஒன்னுமே பேசாம வர்ர? நீ சொன்னா



பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கறது வெறுமன காசும் பணமும் சேக்க மட்டுமில்லை. அவ புருஷனோட சேர்ந்து சந்தோஷமா வாழ வேணாமா?

மாதிரியே குலதெய்வ பூஜ முடிச்சவொடனே கல்யாண பேச்சு வருது. பாத்தியாடா, பாவடராயனோட மகிமையன்னு சந்தோஷத்துல பொங்குவன்னு பாத்தா அமைதியா இருக்க? ஆச்சரியமா இருக்கேம்மா?

மெல்ல குரலை கனைத்துக் கொண்டு அம்மா பேச ஆரம்பித்தாள் "நல்ல விஷயம் பேசுறப்ப நான் அஸ்து போடறதா நினைக்காதேப்பா. அம்மாடி தாரிணி, அவங்க ஒரு வகைல உனக்கு சொந்தமும் கூட. அதுனால உனக்கு இந்த வரன் பிடிச்சிருக்கலாம். நான் முட்டுக் கட்டை போடறேன்னு நினைக்காதே. ஆனா, என் மனசுல படறத சொல்லிடறேன். அப்புறம் பொண்ண பெத்த நீங்கதான் முடிவு செய்யணும்."

"எதுக்கு அத்தை நீங்க இவ்ளவு பீடிகையெல்லாம் போடறீங்க. நம்ம குடும்பத்துக்குள்ளதானே பேசுறோம், பெரியவங்க நீங்க எதுக்கு இவ்ளோ ஜாக்கிரதயா பேசறீங்க. மனசுல படறத சொல்லுங்க. நீங்க சொல்றத மீறியா உங்க பேத்திக்கு கல்யாணம் செய்யப்போறோம்?" தாரிணி பவ்யமாகச் சொன்னாலும் அம்மா மீண்டும் கொஞ்ச நேரம் மவுனமாக இருந்தார்.

"அந்த திருநாவுக்கரசும் சரி, அவரு சம்சாரமும் சரி பணம் பணம்னு அது ஒன்னே குறியா இருக்கறவங்க. அது ஒன்னும் தப்பில்லைதான். ஆனா அவரோட மூத்த மகனுக்கு கல்யாணம் ஆகி பன்னெண்டு வருஷம் ஆகுது. அந்தப் புள்ளயும் ஏதோ வெளிநாட்டுலதான் வேல பாக்குது. பொண்டாட்டி புள்ளங்கள கூட்டிகிட்டு போய் வச்சுக்கறதுக்கு வசதி இருக்கா மாதிரி பெரிய வேலைதான். குடும்பத்த கூட்டி வர பர்மிஷனெல்லாம் இருக்காம். ஆனாலும் அந்த மருமக இங்க வங்காரம்பேட்டைல இவங்க வீட்டுலதான் இன்னமும் இருக்கு. ரெண்டு பிள்ளங்களையும் இதோ இங்க மணி மெட்ரிகுலேஷன்லதான் சேத்திருக்காங்க. அந்த பொண்ண பெத்தவங்க இந்த அதிசயத்த பாத்து மாஞ்சு போறாங்க – வெளிநாட்டுல குடும்பம் பண்ணினா காசு மீக்க முடியுமா, அவன் சம்பாதிச்சுட்டு வரட்டும். உங்க பொண்ணை சவுகரியமாத்தான் வச்சிருக்கோம்னு நியாயம் பேசறாங்களாம் பையன பெத்தவங்க."

பேச்சை சற்றே நிறுத்தி சில வினாடிகளுக்கு வெளியில் வேடிக்கை பார்த்தாள்.

"பணம் காசெல்லாம் நீயே நிறைய சம்பாதிச்சு வச்சிருக்க. பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கறது வெறுமன காசும் பணமும் சேக்க மட்டுமில்லை. அவ புருஷனோட சேர்ந்து சந்தோஷமா வாழ வேணாமா? இந்தப் புள்ளையும் வெளிநாட்டுலதான் இருக்கான்னா, நம்ம பொண்ணும் லெட்டர்லதான் குடித்தனம் பண்ண வேண்டியிருக்கும். நம்ம புள்ளைக்கு அப்படி ஒரு நிலம வேணாம்பா... உள்ளூரோ வெளியூரோ ராமனிருக்கும் இடம் சீதைக்கு அயோத்தின்னு நம்ம பெரியவங்க சும்மா சொல்லலை."

மேற்கொண்டு முடிவை நானும், தாரிணியும்தான் எடுக்க வேண்டும் என்பது போல் பேச்சை நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கத் துவங்கினாள்.

"நீங்க சொல்ல வரது எனக்கு நல்லாவே புரியுதும்மா. ஆரபியும் மேல படிக்கற ஆர்வத்துலதான் இருக்கு. அதுனால இப்போதைக்கு அவ கல்யாணத்துக்கு நானும் அவசரப் படலை. இதையே காரணமா அவங்ககிட்ட சொல்லிருங்க" ஆரபியும் அப்பாவும் இறுக்கம் குறைந்து புன்னகைக்கத் தொடங்கினர். கார் வெறுமையான பொட்டல் மைதானத்தை தாண்டி காவிரிப் பாலத்தில் நுழைந்தது. கழுத்தைத் திருப்பி அந்த காலிப் பொட்டலை இன்னொரு முறை பார்ப்பதை மட்டும் என்னால் தவிர்க்க முடியவில்லை.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை Scan செய்யவும்

முற்றம் இதழின் சந்தா விபரம்	
ஒரு ஆண்டு	ரூ. 240/-
இரண்டு ஆண்டு	ரூ. 450/-
மூன்று ஆண்டு	ரூ. 680/-

விளம்பரக் கட்டணம்	
அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

முற்றம் இதழில் உங்களுடைய படைப்புகளான, கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை மற்றும் 'வாழ்ந்துக் காட்டுவோம்' பகுதியில் உங்கள் குழுவின் சாதனைக் கதை இடம் பெற உரிய புகைப்படங்களுடன் கீழ்காணும் மின்னஞ்சல், முகவரி வழியே எங்களை அணுகுங்கள். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@gmail.com

கௌரவ ஆசிரியர்
ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப.

சிறப்பு ஆலோசகர்
ஐயன் கார்த்திகேயன், பி.டெக்.,

பதிப்பாளர், ஆசிரியர்
எஸ். சின்னப்பன்

மேலாளர்
வா. ராகுலன், PRO

துணை ஆசிரியர்
ஏ. கண்ணன்

பிழை திருத்துபவர்
எஸ்.எஸ். ரவிச்சந்திரன்

வடிவமைப்பு
என்.எஸ். நாணா

புத்தக மேம்பாடு
Aarah Digitainments

ஊரக வளர்ச்சி
மற்றும்
ஊராட்சித்துறை
மலர்: 26
இதழ்: 12
ஏப்ரல் 2025

கவிதை

– கவின் மலர்

முகவரியற்றவள்

எங்குமிருப்பேன்
நேற்று அங்கே
இன்று இங்கே
நாளை எங்காவது
நான்கு சுவர்களும் மேற்கூரையும்
எனக்கானதல்ல

அணை கட்ட முயல்கிறாய்
பாதாளத்தில் தள்ளுகிறாய்
மணலைத் தின்று செரிக்கும்
சமுத்திரமும்
புதையல்களோடு வருபவளும் நான்

கருமையைப் பூசுகிறாய்
கடுங்குளிர் காற்றைத் திருப்புகிறாய்
இருள்
துருவப் பறவை
இரண்டும் நான்

புனைவுகளைத் தின்கிறாய்
புதைகுழிக்குள் தள்ளுகிறாய்
கனவுகளின் தொழிற்சாலை
ஈர்ப்பு விசைத் தத்துவத்திற்கு
சவாலும் நான்

சுவாசத்தைத் திருடுகிறாய்
இடுகாட்டில் தள்ளுகிறாய்
சகல உயிர்களுக்குமான மூச்சுக்
காற்றும்
எகிப்தியப் பிரமிடுகளில் வாழ்பவளும்
நான்

அனலைக் கக்குகிறாய்
கிழிந்த என் உடுப்புகளை எள்ளி
நகையாடுகிறாய்
அணைக்க முடியா நெருப்பும்
நிர்வாணசாந்தி அடைந்தவளும் நான்

எனக்கு முகவரியளிக்க முயல்கிறாய்
புவிக் கோளத்தின் கானகங்களில்
வேட்டையாடி
இறைச்சியையும் காய்கனிகளையும்
கொணர்ந்து
கார்முகிலில் நீரெடுத்து
சூரியனின் தகிப்பில் உணவு சமைத்து
சந்திரனின் முதுகிலமர்ந்து உண்டு
களித்து
வெண் பஞ்சு மேகப் பொதிகளில்
உறங்கியெழுந்து
நட்சத்திரங்களுக்கிடையே
அண்டவெளியில் தாவி விளையாடி
கோள்களுக்கிடையே ஊஞ்சல்
கட்டியாடுகையில்
மின்னல் விழுதைப் பிடித்து மீண்டும்
பூமிக்கு வந்து
இப்பிரபஞ்சத்தை இணைப்பவள் நான்
பிரபஞ்சம் முழுவதும் என் வாழிடம்

என் காலத்தைப் பறிக்காதே
நானொரு சகாப்தம்.

ஓவியம்: துர்கா

ஆட்டிசம் நோயுமில்லை! அதற்கு மருந்துமில்லை!!

நம்மில் பலருக்கும் ஆட்டிசம் என்பது ஒரு நோய் என்ற தவறான புரிதல் இருக்கலாம். ஆனால் ஆட்டிசம் என்பது நோயல்ல, அது ஒரு நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடாகும். பொதுவாக இதனை ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிஸ்ஆர்டர் (ASD) என்கின்றனர். இதனை குழந்தைப் பருவத்தின் தொடக்க நிலையிலேயே கண்டுபிடிக்கலாம். இக்குறைபாட்டினால் பாதிக்கப்படும் குழந்தைகள், சமூகத் தொடர்பு, தகவல் பரிமாற்றம், நடத்தை மற்றும் கற்றல் திறன்களில் சிரமங்களை எதிர்கொள்வர். ஆட்டிசத்தின் தன்மை லேசானது முதல் தீவிரமானது வரையில் மாறுபடும்.

ஆட்டிசம் பாதிப்புக்கு உள்ளான குழந்தைகளை எப்படி அடையாளம் காண்பது?

ஆட்டிசத்தின் அறிகுறிகள்

5 வயதுக்கும் குறைவான ஓர் ஆட்டிச நிலைக் குழந்தையிடம் கீழ்காணும் நடத்தைகளைக் காண முடியும்.

- நேராக கண்களைப் பார்க்க மாட்டார்கள்.
- பெயர் சொல்லி அழைத்தால் திரும்ப மாட்டார்கள்
- தனக்கு வேண்டியதை விரல் நீட்டி கேட்கத் தெரியாது. பெற்றோரின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று வேண்டிய பொருளைச் சுட்டிக் காட்டுவார்கள்.
- பிறருடன் கலந்து பழகாமல் தனியே இருப்பதையே அதிகம் விரும்புவார்கள்.
- பேச்சு வளர்ச்சியில் தாமதம் இருக்கும் அல்லது பேச இயலாமல் இருப்பார்கள்
- ஒரே செயல்களை மீண்டும் மீண்டும் செய்வார்கள்

-இப்படியாக நீளும் அறிகுறிகள் இருப்பின், குழந்தைகள் நல மருத்துவரை அணுகுவது அவசியம் என்கிறார் மருத்துவர். ரெமா சந்திரமோகன். இவர் சென்னை அசோக் நகரில் தமிழ்நாடு அரசு சார்பில் தொடங்கப்பட்டுள்ள ஆட்டிசத்திற்கான ஒருங்கிணைந்த ஒப்புயர்வு மையத்தின் இணை செயல்தலைவர்.

ஆட்டிசம் கண்டறிதல்

ஆட்டிசத்தை தொடக்க காலத்திலேயே கண்டறிந்து, பயிற்சிகளைத் தொடங்கிவிட்டால் குழந்தையின் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காண முடியும் என்கிறார் மருத்துவர் ரெமா.

பயிற்சி முறைகள்

பயிற்சி முறைகள் குறித்து அம்மையத்தின் மனநல மருத்துவர், விமல் டோஷி வீரப்பன் கூறும்போது, "ஆட்டிசம் ஒரு நோய் இல்லை என்பதால், இதனைக் குணப்படுத்துவதற்கு மருந்துகளும் இல்லை. ஆனால் முறையான பயிற்சிகளில் முன்னேற்றம் காண முடியும். இருப்பினும், தூக்கமின்மை, உணர்ச்சிகளின் தீவிர வெளிப்பாடு, தன்னைத்தானே தாக்கிக்கொள்ளும் சூழல் ஏற்படும் பட்சத்தில், அதனைக் கட்டுப்படுத்த சில மருந்துகள் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தையின் தேவைக்கு ஏற்ப பயிற்சி

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor: S. CHINNAPPAN.

"தனக்கு வேண்டியதை விரல் நீட்டி கேட்கத் தெரியாது. பெற்றோரின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று வேண்டிய பொருளைச் சுட்டிக் காட்டுவார்கள்."

மருத்துவர். ரெமா சந்திரமோகன்

வகுப்புகள் தனித்தனியாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு வகுப்பும் சுமார் 45 நிமிடங்கள் வரை இருக்கும். எல்லா பயிற்சியிலும் பெற்றோர்கள் உடன் இருப்பது அவசியம். பயிற்றுவிப்போர் ஒரு மடங்கு பயிற்சி அளித்தால், வீட்டில் அதே போல் இரண்டு மடங்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறோம். இதில் பெற்றோர்களின் பங்கு மிகமுக்கியமானது." என்கிறார். மேலும் இங்கு பல வகையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவை, பேச்சு மற்றும் மொழி பயிற்சி- தகவல் தொடர்பு திறன்களை மேம்படுத்துதல். குழந்தைக்கு கவனிக்க, புரிந்துகொள்ள மற்றும் அதற்கு ஏற்ப பதில் சொல்ல கற்றுத்தரப்படுகிறது.

"தமிழ்நாடு அரசு சார்பில் இயங்கும் ஆட்டிசத்திற்கான ஒருங்கிணைந்த ஒப்புயர்வு மையத்தில், குழந்தைகளுக்கு இலவச பயிற்சிகள் வழங்கப்படுகின்றன."

செயல்வழிப்பயிற்சி

குழந்தைகளுக்கு உட்காருவது முதல், உணவு உண்பது, மலம் கழிப்பது உள்ளிட்ட அத்தியாவசிய செயல்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. உடல் இயக்கப் பயிற்சிகள், சிறப்புக் கல்வி முறைகள் என இங்கே பலவகையான பயிற்சிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறப்புத் தேவை உடைய பெற்றோருக்கும் ஆற்றுப்படுத்தும் உளவியல் வகுப்புகளும் இங்கே உள்ளன.

தமிழக அரசின் சிறப்பான முன்னெடுப்பு

மாநிலத்திலேயே முதல் முறையாக சென்னை, கே.கே. நகரில் தமிழ்நாடு அரசு சார்பில் "ஆட்டிசத்திற்கான ஒருங்கிணைந்த ஒப்புயர்வு மையம்" உருவாக்கப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமாக இயங்கும் இந்த மையத்தில், ஆட்டிசம் கண்டறிவது முதல் மேற்கூறிய அனைத்து வகையான பயிற்சிகளும், தேவைப்படும் குழந்தைகளுக்கு மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

தீர்வை நோக்கி..

இதுவரை ஆட்டிசத்திற்கு சரியான மருத்துவ காரணங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. இதற்கான முழுமையான குணப்படுத்தும் முறை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும், முறையான பயிற்சிகள் அளிப்பதன் மூலம், அவர்களை மற்றவர்களின் துணையின்றி தன்னிச்சையாக இயங்குவதற்கும், மற்றவர்களுடன் இணைந்து பயணிப்பதற்கும் சிறுவயதிலேயே தொடங்கும் பயிற்சிகள் பெருமளவு உதவி செய்கின்றன.

ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வை பரவலாக்கவும் ஆட்டிசம் பற்றிய தவறான புரிதல்களை களையவும், ஆட்டிசம் உள்ள நபர்களையும் அவர்களின் குடும்பங்களையும் ஆதரிக்கவும், ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 ஆம் நாள் சர்வதேச ஆட்டிசம் விழிப்புணர்வு தினமாகக் கடைப்பிடித்து வருகிறது. அவர்களும் கண்ணியத்துடன் வாழ நாமும் உதவுவோம்.

– க. ஸ்ரீநிதி

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569/2023
Reg. No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564/2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th-14th April 2025 Posted at Patrika Channel, Egmore.

இட்லி மாவு தொழிலில் சாதிக்கிறேன்...
மதி சிறகுகள் தொழில் மையம்
தொழிலாதரவுகளை வழங்கியது..!

ப. தமிழரசி,
ராணி இட்லி மாவு தொழில் நிறுவனர்,
விக்கிரவாண்டி,
விழுப்புரம்.

மதி சிறகுகள் தொழில் மையத்தில் அனைத்து தொழிலாதரவுகளும் வழங்கப்படும்:

- தொழில் திட்டம்
- கடனுதவி
- தொழிற்பயிற்சி
- சந்தை இணைப்பு
- இ-சேவை மைய சேவைகள்

மதி சிறகுகள் தொழில் மையம்

உங்க பிஸினஸ் சப்போர்ட்டுக்கு கால் பண்ணுங்க,
ஹெல்ப்லைன் (10.am-6.pm) 155 330 (அ) 1800 599 1600

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP